
# தின பூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 213 ஆடி 09 | RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, வெள்ளி, ஜூலை 25, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

**இந்தியர்களின் வேலைக்கு ஆப்பு..? கூகுள், ஆப்பிள் நிறுவனங்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல்**

...2-ம் பக்கம்

**100 சதவீதம் ஆதாரம் உள்ளது: தேர்தல் ஆணையம் எங்களிடம் இருந்து தப்ப முடியாது: ராகுல்**

...3-ம் பக்கம்

**இங்கிலாந்து தொடரிலிருந்து விலகினார் ரிஷப் பந்த்: இந்திய அணிக்கு பின்னடைவு**

...6-ம் பக்கம்






● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், 6 முதல் 9-ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான "திறன்" இயக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், வெற்றி அழகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### புதிதாக 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு

# பணி நியமன ஆணைகளை வழங்கினார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

## இடைநிற்றல் இல்லாத மாநிலம் தமிழ்நாடு என பெருமிதம்

சென்னை, ஜூலை 25-

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மேலும் தொடக்கக் கல்வியில் 100 சதவீதம் இடைநிற்றல் இல்லாத ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டும் தான் என்றும் அவர் கூறினார். பணி நியமன ஆணைகளை பெற்ற ஆசிரியர்களுக்கு மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.**

தொடர்ந்து, 6 முதல் 9 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான "திறன்" இயக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகங்களை துணை முதல்வர் வெளியிட்டார். மேலும் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குக் கணினிசார் அடிப்படை அறிவியலையும், செயற்கை நுண்ணறிவுத் திறன் மற்றும் அதனைப் பயன்படுத்தும் நுட்ப அறிவியலையும் கற்பிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்ட பாடநூல்களையும் வெளியிட்டார்.

இதன் பின்னர் நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது.,"ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றி பெற்ற 2 ஆயிரத்து 457 தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், பெருமையடைகின்றன். அதோடு சேர்த்து பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக 'திறன்' மற்றும் டிஎன் ஸ்பார்க் ஆகிய இரண்டு முக்கியமான முன்னெடுப்புகளையும் இங்கே தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனக்கு எப்பவுமே ஆசிரியர்களைப் பார்த்தாலே கொஞ்சம் பதற்றம் வந்துவிடும். ஒன்றிரண்டு ஆசிரியர்களை பார்த்தாலே பதற்றம் வந்து விடும். இன்றைக்கு இத்தனை ஆசிரியர்கள், 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் வந்து இருக்கிறீர்கள். எனவே உங்களைப் பார்க்கும்போது கொஞ்சம் பதற்றம் அதிகமாகவே இருக்கிறது. இருந்தாலும், உங்களை எல்லாம் இன்றைக்கு ஒரே இடத்தில் பார்க்கும் போது மிகவும் பெருமையாக இருக்கின்றது.

தொடக்கக் கல்வியில் 100 சதவீதம் இடைநிற்றல் இல்லாத ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான். அதற்கு காரணமும் வந்திருக்கக்கூடிய ஆசிரியர்கள் நீங்கள் தான். இதனை நான் சும்மா சொல்லவில்லை. மத்திய அரசினுடைய புள்ளிவிவரங்கள் இதை சொல்கின்றன. அத்தகைய சிறப்புமிக்க கல்வித்துறையில் பணியேற்கக்கூடிய உங்களுக்கெல்லாம் நான் சொல்வது ஒன்றே ஒன்று தான். ஊர்கூடி இழுக்க வேண்டிய அந்த கல்வி எனும் தேருக்கு தொடக்கக் கல்வி ஆசிரியர்களாகிய நீங்கள்தான் அச்சாணி. இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக விழாவில் பங்கேற்க முடியாதது குறித்து

(கடைசி பக்கம் பார்க்க)

### கமல்ஹாசன், தி.மு.க.வின் வில்சன் உள்ளிட்ட

# 4 பேர் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்பு

புதுடெல்லி, ஜூலை 25-

**தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்ட 4 எம்.பி.க்கள் மாநிலங்களவை உறுப்பினராக இன்று பதவியேற்கின்றனர்.அ.தி.மு.க.வின் இன்பதுரை, முன்னாள் எம்.எல்.ஏ. தனபால் ஆகிய இருவரும் திங்கள்கிழமை பதவியேற்கவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.**



பாராளுமன்ற மேல்சபையில் எம்.பி.க்களாக இருக்கும் தமிழகத்தை சேர்ந்த எம்.பி.க்களில் தி.மு.க.வை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, ம.தி.மு.க.வின் வைகோ, அ.தி.மு. க.வை சேர்ந்த சந்திரசேகரன், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ஆகிய 6 பேரின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவு பெற்றது. முன்னதாக காலியாகும் இடங்களுக்கான தேர்தல் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது. அதில் தி.மு.க., அ.தி.மு.க. முன்னுறுத்திய ஆறு வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வாகினர்.

இதில், தி.மு.க. கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசனும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நிலையில், மாநிலங்களவை உறுப்பினர்களாக தமிழ்நாட்டை சேர்ந்த 4 பேர் பதவியேற்கின்றனர். அதில் மக்கள் நீதிமய்ய தலைவர் கமல்ஹாசன் இன்று பதவியேற்கவுள்ளார். கமலுடன் தி.மு.க. சார்பில் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செய்யப்பட்டுள்ள பி. வில்சன், கவிஞர் ராஜாத்தி என்கிற சல்மா, எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோரும் இன்று பதவியேற்கிறார்கள். அ.தி.மு.க.வின் இன்பதுரை, முன்னாள் எம்.எல்.ஏ. தனபால் ஆகிய இருவரும் திங்கள்கிழமை பதவியேற்கவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்க கமல்ஹாசன் நேற்று டெல்லி புறப்பட்டார்.

மாநிலங்களவையில் இன்று பதவியேற்றவுடன் காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியை மரியாதை நிமித்தமாக கமல் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 'ஆஞ்சியோ' பரிசோதனையில் எந்த பிரச்சனையும் இல்லை:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நலமுடன் இருக்கிறார்

## ஓரிரு நாளில் வழக்கமான பணிக்கு திரும்புவார்; தனியார் மருத்துவமனை அறிக்கையில் தகவல்

சென்னை, ஜூலை 25-

**முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நடத்தப்பட்ட 'ஆஞ்சியோ' பரிசோதனையில் எந்த பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்துள்ள தனியார் மருத்துவமனை, அவர் நலமுடன் உள்ளதாகவும், ஓரிரு நாளில் வழக்கமான பணிக்கு திரும்புவார் என்றும் மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



### அதிகாரிகளுடன் ஆலோசனை...

முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனைல் இருக்கும் நிலையிலும், மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இருப்பினும் 4-வது நாளாக நேற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் சிகிச்சையில் உள்ளார். இன்னும் 2 அல்லது 3 நாட்களில் வீடு திரும்புவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

### துரைமுருகன் சந்திப்பு

இந்த நிலையில், அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை அமைச்சர் துரைமுருகன் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் துரைமுருகன் கூறுகையில், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பரிசோதனையில் எந்தவொரு சிறிய அடைப்பும் இல்லை. ஆஞ்சியோ பரிசோதனைக்குப் பிறகு முதல்வர் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். ஒரு பிரச்சினையும் இல்லை. முதல்வர் எப்போது டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்பதை மருத்துவர்களே சொல்வார்கள் என்று கூறினார்.

### தலைசுற்றல் ஏன்..?

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நிலை குறித்து அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஏற்பட்ட தலைசுற்றல் பிரச்சினை தொடர்பாக கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளில் இதயத்துடிப்பில் உள்ள சில வேறுபாடுகள் காரணமாகவே இந்த தலைசுற்றல் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

### நலமாக உள்ளார்....

இதய சிகிச்சை மருத்துவர் டாக்டர் ஜி.செங்குட்டுவேலு அவர்களின் தலைமையிலான மருத்துவ வல்லுநர் குழுவின் அறிவுரையின்படி, இதனை சரி செய்வதற்கான சிகிச்சைமுறை அப்போலோ மருத்துவமனையில் இன்று (நேற்று) காலை செய்யப்பட்டது. இன்று (நேற்று) மேற்கொள்ளப்பட்ட ஆஞ்சியோகிராம் சோதனையும் இயல்பாக இருந்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் நலமாக உள்ளார். தனது வழக்கமான பணிகளை இரண்டு நாட்களில் மேற்கொள்வார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா - இங்கிலாந்து இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து

லண்டன், ஜூலை 25-

**இந்தியா-இங்கிலாந்து இடையே வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.**



இந்தியா-இங்கிலாந்து இடையே நீண்ட காலமாக சிறந்த உறவுகள் நீடித்து வருகின்றன. இதை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமர் மோடி 2 நாள் சுற்றுப் பயணமாக இங்கிலாந்து சென்றுள்ளார். இதன்படி நேற்று முன்தினம் லண்டன் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை நேற்று பிரதமர் மோடி சந்தித்தார். இந்த சந்திப்பின் போது இந்தியா-இங்கிலாந்து இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனை தொடர்ந்து இந்தியா- இங்கிலாந்து இடையே முக்கிய வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த ஒப்பந்தம் மூலமாக இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு ஜவுளி, காலணி மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிக்கும் எனவும், இரு நாடுகளும் இதன் மூலம் பயனடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா-இங்கிலாந்து இடையே பல ஆண்டுகளுக்கு பிறகு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

முன்னதாக இரு பிரதமர்கள் முன்னிலையில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல், பிரிட்டன் வர்த்தக அமைச்சர் ஜோனாதன் ரெனால்ட்ஸ் ஆகியோர் முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (எஃப்.டி.ஏ.) கையெழுத்திட்டனர். லண்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின், கடந்த மே 6-ம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்.டி.ஏ.) இறுதி வடிவத்துக்கு வந்தது. இதன்கீழ், 2030-இல் இருதரப்பு வர்த்தகம் 120 பில்லியன் டாலர் என்ற உயர்நிலைக்கு இரட்டிப்பாகும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால், இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்களான தோல், காலணிகள், துணிகள் ஆகியவற்றின் மீதான இறக்குமதி வரியும் அதேபோல, பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்களான விஸ்கி, ஜின், குளிர் பானங்கள், அழகு சாதனங்கள், இதர வேளாண் பொருள்கள் ஆகியவற்றின் மீதான இறக்குமதி வரியும் குறக்கப்படும். பிரிட்டனில் தயாரிக்கப்படும் சில குறிப்பிட்ட ரக கார்களுக்கான வரி இந்தியாவில் 100 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக கணிசமாக குறைக்கப்படவுள்ளது. இருதரப்பிலும் வர்த்தகத்தை எளிமைப்படுத்த மின்னணு முறையில் காகித பயன்பாடு அல்லாத முறையிலான வர்த்தகமும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

### எதிர்க்கட்சிகள் தொடர் அமளியால்

# பார்லி., தொடர்ந்து 4-வது நாளாக முடங்கியது

புதுடெல்லி, ஜூலை 25-

**எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளி காரணமாக நேற்று 4-வது நாளாக பாராளுமன்ற 2 அவைகளும் முடங்கின. முன்னதாக ஓய்வு பெறும் வைகோ உள்ளிட்ட எம்பிக்களுக்கு அவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.**

பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் கடந்த 21-ந்தேதி தொடங்கியது. இதில் ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் போன்ற பிரச்சினைகள் பெரும் புயலை கிளப்பி வருகின்றன. இந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கி வருவதால் முதல் 3 நாட்களும் இரு அவைகளும் முடங்கின. இந்நிலையில், நேற்று காலை அவை கூடியதும் மீண்டும் அதே கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும், கேள்வி நேரம் நடந்து கொண்டிருந்தது.


இதற்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர். பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை கைவிடக் கோரி எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டதால் பாராளுமன்ற இரு அவைகளும் தொடர்ந்து 4-வது நாளாக நேற்றும் ஒத்திவைக்கப்பட்டன.

இவ்வாறு மழைக்கால கூட்டத்தொடரின் முதல் 4 நாட்களிலும் குறிப்பிட்ட அலுவல்கள் எதுவும் நடைபெறாமல் பாராளுமன்றம் முடங்கி வருவது அரசு வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

முன்னதாக மாநிலங்களவை எம்பிக்கள் வைகோ, பி.வில்சன், சண்முகம், சந்திரசேகரன், முகம்மது அப்துல்லா ஆகியோர் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவர்களுக்கான பிரிவு உபசார விழா மாநிலங்களவையில் நடைபெற்றது.

இதையடுத்து, வைகோ உள்ளிட்டோர் தங்கள் அனுபவங்கள் குறித்து உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து அவர்களின் பங்களிப்பு தொடர்பாக பிற எம்பிக்கள் பாராட்டு தெரிவித்தனர்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -542.47 | -157.80 |
| பாயிண்ட் 82,184.17 | பாயிண்ட் 25,062.10 |




**தங்கம்**
1 சவரன் ₹74,040
1 கிராம் ₹9,255



**வெள்ளி**
1 கிலோ ₹128,000
1 கிராம் ₹128.00

**டாலர்** ₹86.39

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### இந்தியர்களை வேலைக்கு எடுக்கக் கூடாது:
# கூகுள், ஆப்பிள் நிறுவனங்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல்

**வாஷிங்டன், ஜூலை 25-**

இனி இந்தியர்களை வேலைக்கு எடுக்கக் கூடாது. அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.



வாஷிங்டனில் நடந்த ஏ.ஐ., மாநாட்டில் பங்கேற்ற ட்ரம்ப், முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான கூகுள், மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் பணியாளர் தேர்வு குறித்து அறிவுறுத்தலை வழங்கினார். அப்போது, அவர் பேசியதாவது; ஆப்பிள், கூகுள் போன்ற முன்னணி டெக் நிறுவனங்கள் சீனாவில் தொழிற்சாலைகளை கட்டுகின்றன. இந்தியாவில் இருந்து ஊழியர்களை நியமிக்கின்றன. அயர்லாந்தில் லாபத்தை சேர்க்கின்றனர். ஆனால் அமெரிக்க தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

அமெரிக்கா வழங்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி முன்னணி நிறுவனங்கள் அதிக லாபத்தை ஈட்டுகின்றன. ஆனால், வெளிநாடுகளிலேயே அதிக முதலீட்டை செய்கின்றன. இனி அது நடக்காது. எனவே, அமெரிக்க நிறுவனங்கள் சீனாவில் தொழிற்சாலைகளைக் கட்டுவதையும், இந்தியர்களை வேலைக்கு எடுப்பதையும் விட்டு விட்டு, உள்நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும், இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ரஷ்யா: பயணிகள் விமானம் விழுந்து விபத்து: 50 பேர் பலி

**மாஸ்கோ, ஜூலை 25-**

ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் காணாமல் போன பயணிகள் விமானத்தின் எரியும் பாகத்தை, மீட்பு ஹெலிகாப்டர் கண்டுபிடித்ததாக அந்நாட்டின் அவசர கால அமைச்சக தரப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம், "விமானம் ரேடார் கட்டுப்பாட்டில் இருந்து விலகி மாயமானது. அந்த, விமானத்தின் எரியும் உடற்பகுதி கண்டறியப்பட்டுள்ளது." என்று தெரிவித்துள்ளது. உள்ளூர் அதிகாரிகள், "இந்த விபத்தில் யாரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை" என தெரிவித்தனர்.

ரஷ்ய-சீன எல்லையில் உள்ள பிளாகோவெஷ்சென்ஸ்க் நகரத்திலிருந்து டின்டா நகரத்திற்குச் சென்ற விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 43 பயணிகள் மற்றும் 6 பணியாளர்கள் இருந்தனர். 50 பேருடன் சென்ற இந்த பயணிகள் விமானம் ரஷ்யாவின் கிழக்கு அமூர் பகுதியில் சென்றபோது ரேடாரில் இருந்து காணாமல் போனது. இதனை அமூர் பிராந்திய ஆளுநர் வாசிலி ஓர்லோவ் உறுதி செய்துள்ளார். சைபீரியாவைச் சேர்ந்த அங்காரா நிறுவனத்தால் இயக்கப்படும் இந்த விமானம், டின்டா விமான நிலையத்தை நெருங்கும் போது ரேடாரில் இருந்து மாயமானதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் பயணம் செய்த 50 பேரும் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

### பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த
# இந்தியா - இஸ்ரேல் ஒப்புதல்

**புது டில்லி, ஜூலை 25-**

இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் ஒரு நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தியா வந்துள்ள இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் துணை தலைமைத் தளபதி அமிர் பராமுடன், பாதுகாப்புத் துறைச் செயலர் ராஜேஷ் குமார் சிங் இருதரப்பு பேச்சுவார்த்தையில் புதன்கிழமை ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை நீண்டகால நோக்கில் மேலும் வலுப்படுத்துவதற்கு ஒரு நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஆண்டு ஜூலையில், இந்தியாவில் நடந்த ராணுவ கூட்டுப் பணிக் குழு கூட்டத்துக்குப் பிறகு நடைபெற்று வரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் இருதரப்பினரும் ஆய்வு செய்தனர்.

பஹல்காமில் ஏப்ரல் 22 இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு இஸ்ரேல் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், "பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு முழு ஆதரவையும் உறுதிப்படுத்தியது." பயங்கரவாதத்துக்கு எதிரான சமரசமில்லாத அணுகுமுறையை ராஜேஷ் குமார் சிங் மீண்டும் வலியுறுத்தினார். கடந்த 2023, அக்டோபர் 7 இல் இஸ்ரேலில் ஹமாஸ் படையினர் அத்துமீறி நடத்திய பயங்கர தாக்குதல்களை கண்டித்தவர், அனைத்துப் பிணைக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

### வலிமையான பாஸ்போர்ட் பட்டியல்:
# இந்தியாவுக்கு 77-வது இடம்

**டெல்லி, ஜூலை 25-**

உலகின் வலிமையான பாஸ்போர்ட் பட்டியலில் இந்தியாவுக்கு 77-வது இடம் கிடைத்துள்ளது. வலிமையான பாஸ்போர்ட் பட்டியலில் சிங்கப்பூர் தொடர்ந்து உலகளவில் முதலிடத்தில் உள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டின் சமீபத்திய பட்டியலில் இந்தியா எட்டு இடங்கள் முன்னேறி 77வது இடத்தைப் பிடித்துள்ளது. இது கடந்த ஆறு மாதங்களில் எந்த நாடும் கண்டிராத மிகப் பெரிய முன்னேற்றமாகும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா 85வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

லண்டனை தளமாகக் கொண்ட ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு, ஒரு நாட்டின் பாஸ்போர்ட் அதன் குடிமக்களுக்கு விசா இல்லாமல் பயணிக்க அனுமதிக்கும் நாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகளவில் தரவரிசைப்படுத்துகிறது. தற்போது, இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 59 நாடுகளுக்கு விசா இல்லாமல் அல்லது வந்தவுடன் விசா பெறும் வசதியுடன் பயணிக்க முடியும். இந்தியர்கள், மலேசியா, இந்தோனேசியா, மாலத்தீவுகள், தாய்லாந்து, பூட்டான், நேபாளம் உள்ளிட்ட நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.

வலிமையான பாஸ்போர்ட் பட்டியலில் சிங்கப்பூர் தொடர்ந்து உலகளவில் முதலிடத்தில் உள்ளது. சிங்கப்பூர் பாஸ்போர்ட் உடன் 193 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளின் பாஸ்போர்ட்டுகள் உடன், விசா இல்லாமல் 189 நாடுகளுக்குள் நுழையலாம். இந்த முறை முன்னணியில் இருந்த அமெரிக்கா 10வது இடத்திற்கும், இங்கிலாந்து 6வது இடத்திற்கும் சரிந்துள்ளன.

# தர்பூசணி விவசாயிகளுக்கு இழப்பீடு: தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஜூலை 25-**

தர்பூசணி பழங்களில் ரசாயனம் செலுத்தப்பட்டதாகக் கூறி, உணவு பாதுகாப்பு துறையினர் பிரச்சாரத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து பரிசீலிக்கும்படி, தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தர்பூசணி பழங்களின் நிறத்துக்கும், சுவைக்கும் ஊசி மூலம் ரசாயனம் செலுத்தப்படுவதாகக் கூறி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திய உணவு பாதுகாப்பு துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி செங்கல்பட்டு விவசாய நலச் சங்கத்தின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கில் தோட்டக்கலை துறை தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், தர்பூசணி பழங்களில் எந்த ரசாயனமும் செலுத்தப்படவில்லை என கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் விசாரணைக்கு வந்தபோது, அதிகாரிகள் வேண்டுமென்றே பொதுமக்களிடையே தவறான பிரச்சாரத்தை பரப்பியதால், தர்பூசணி விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்ற நீதிபதி, இழப்பீடு கோரி விவசாயிகள் அளித்துள்ள மனுவை எட்டு வாரங்களில் பரிசீலிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

# தாய்லாந்து - கம்போடியா தீடிர் மோதல்; 9 பேர் பலி

**பாங்காக், ஜூலை 25-**

தாய்லாந்து- கம்போடியாவில் ராணுவ வீரர்கள் மோதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் இடையே கடந்த மே மாதத்தில் மோதல் போக்கு ஏற்பட்டது. அப்போது, கம்போடியா ராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதனால், இரு நாடுகளின் இடையேயும் பதற்றம் தொற்றியது. இந்த சூழலை தேசியவாதிகள் பெரிதுபடுத்தினர். இதனால், பதற்றம் இன்னும் அதிகரித்தது. இந்நிலையில், இரு நாடுகளை சேர்ந்த ராணுவ வீரர்களும் எல்லை பகுதியில் நேற்று மோதி கொண்டனர். துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் குடிமக்களில் 9 பேர் பலியானார்கள். இதுபற்றி தாய்லாந்து ராணுவம் வெளியிட்ட செய்தியில், அதிக அளவாக சி சா கெத் மாகாணத்தில் பலி எண்ணிக்கை உள்ளது. இதில், எரிவாயு நிலையத்தில் துப்பாக்கி சூடு நடந்ததில், 6 பேர் பலியானார்கள். 3 எல்லைப்புற மாகாணங்களை சேர்ந்த 14 பேர் காயமடைந்தனர் என தெரிவித்து உள்ளது.

# இந்திய பொருளாதாரம் சீராக உள்ளது: ரிசர்வ் வங்கி தகவல்

**டெல்லி, ஜூலை 25-**

உலகநாடுகளிடையே நிலவி வரும் மோதல், அமெரிக்காவின் வரிவிதிப்பு குழப்பம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு நடுவே இந்திய பொருளாதாரம் எவ்வித பாதிப்பும் இல்லாமல் சீராக உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தகவல் தெரிவித்துள்ளது.

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், இந்திய பொருளாதாரம் கடந்த ஜூன்-ஜூலை காலத்தில் சீராக உள்ளது. உலக நாடுகளிடையே ஏற்பட்ட மோதல், அமெரிக்காவின் வரிவிதிப்பு இழுபறி உள்ளிட்ட காரணங்களை காட்டிலும் இந்திய பொருளாதாரம் சீரான நிலையில் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக கடந்த 4 மாதங்களில் இந்தியாவின் பணவீக்கம் 4 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் இந்திய பொருளாதாரம், உள்நாட்டு வாணிபத்தால் இயங்குகிறது" என கூறப்பட்டுள்ளது.

# சீனாவில் கொளுத்தும் வெயில்


**பீஜிங், ஜூலை 25-**

சீனாவில் கோடைக்காலம் தொடர்ந்து நீடித்து வருகிறது. தலைநகர் பீஜிங் உள்ளிட்ட நகரங்களில் வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் பொதுமக்கள், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வெயிலில் தவித்து வருகிறார்கள்.

குறிப்பாக சீனாவின் ஷாங்காய் மாகாணத்தில் வெயில் 95 டிகிரிவரை நீடித்து வருகிறது. இதனால் அங்குள்ள உள்ளூர் மக்கள் தலையில் குளிர்ந்த பசை போன்ற திரவத்தை வெள்ளை துணியில் தடவி நெற்றியில் ஒட்டி கொண்டு அலைவதை பார்க்க முடிகிறது.

சீனாவில் கடும் வெயில் காரணமாக மின்சார பயன்பாடு 'கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. கடந்த ஒரே மாதத்தில் (ஜூன்) சீனாவில் நுகர்வோர் பயன்பாடு, தொழிற்சாலைகள் பயன்பாடு என மொத்தம் 150 கோடி கிலோவாட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டதாக உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

**25-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும் என முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**ரிஷபம்:-** மனதில் தைரியமும், புதிய தகவல்கள் புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். நட்பு வட்டம் விரிவடையும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய உத்தியோக வாய்ப்புகள் ஏற்படும்.

**மிதுனம்:-** சுமாரான நாள். சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:-** தனவரவு தாராளமாக இருக்கும் நாள். ஆரோக்கியம் மேம்படும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும்.

**சிம்மம்:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள், பண முடையும் தவிர்க்க முடியாதது. உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர்வழியில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும். சினத்தைக் குறைத்தால் சிக்கல்கள் தீரும்.

**கன்னி:-** தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும். பெண்களால் நன்மை உண்டாகும். ஸ்த்ரீ போக விருத்தி உண்டு.

**துலாம்:-** புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு, பணப்பயன் உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம். புகழ் ஓங்கும். விருப்பங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:-** இரவும் பகலும் போல் இன்பமும் துன்பமும் மாறி வரும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தெய்வ நம்பிக்கையால் தேகத்தில் புது தெம்பு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உற்சாகம் தரும். கருத்தரிப்பு

**தனுசு:-** எந்த விஷயத்திலும் நியாயமாக நடக்க வேண்டிய நாள். அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மனைவியின் கலகத்தால், மற்றவர்கள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**மகரம்:-** பணவரவால் மனம் பரவசப்படும் நாள். ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். காதல் ஈடுபாட்டால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:-** தனவரவு கூடும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும். பெயரும் புகழும் ஓங்கும். புதிய பெண் சினேகம் புத்துணர்வு தரும்.

**மீனம்:-** பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமை பாராட்டுப் பெறாது. கவனமாக படித்து வெற்றிகள் குவிப்பார்கள்.

### நடப்பு ஆண்டில் மட்டும்
# இந்திய விமானங்களில் 183 முறை தொழில்நுட்ப கோளாறுகள் பதிவு

**புதுடெல்லி, ஜூலை 25-**

இந்திய விமானங்களில் இந்த ஆண்டு மட்டும் 183 முறை தொழில் நுட்க கோளாறு ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்துத்துறை இணை மந்திரி முரளிதர் மொகோல் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது;-

"நடப்பாண்டு ஜூலை 21 வரை இந்திய விமான நிறுவனங்கள் தங்கள் விமானங்களில் 183 முறை தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டதாக விமான ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்துள்ளன. இதில் 'ஏர் இந்தியா' நிறுவனம் 85 முறை தொழில்நுட்பக் கோளாறுகளை பதிவு செய்துள்ளது. 'இண்டிகோ' மற்றும் 'ஆகாசா ஏர்' ஆகிய நிறுவனங்கள் முறையே 62 மற்றும் 28 முறையும், 'ஸ்பைஸ்ஜெட்' நிறுவனம் 8 முறையும் தொழில்நுட்பக் கோளாறுகளை பதிவு செய்துள்ளன. விமான நிறுவனங்கள் தெரிவித்த புகார்கள் தொடர்பாகவும், தொழில்நுட்பக் கோளாறுகளை சரி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான விசாரணை நடத்தப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக கடந்த 2021-ம் ஆண்டில், இந்திய விமானங்களில் பதிவான தொழில்நுட்பக் கோளாறுகளின் எண்ணிக்கை 514 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை 2022-ம் ஆண்டில் 528 ஆகவும், 2023-ல் 448 ஆகவும், 2024-ம் ஆண்டில் 421 ஆகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஓணம் பண்டிகையை முன்னிட்டு
# கேரளாவில் 15 பொருட்கள் அடங்கிய தொகுப்பை அறிவித்தது மாநில அரசு

**திருவனந்தபுரம்,ஜூலை 25-**

கேரளாவில் ஆண்டுதோறும் ஓணம் பண்டிகை வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு வருகிற செப்டம்பர் மாதம் 5-ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி மஞ்சள் நிற ரேஷன் கார்டுதாரர்களுக்கு கேரள அரசு சார்பில் 15 பொருட்கள் அடங்கிய இலவச தொகுப்பு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்து உள்ளது. இதன் மூலம் 6 லட்சம் குடும்பங்களுக்கு 15 மளிகை பொருட்கள் அடங்கிய ஓணம் தொகுப்பு இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இவை ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்படும். மேலும் சேம நிலையங்களில் உள்ள 4 உறுப்பினர்களுக்கு ஒரு தொகுப்பு வீதம் இலவசமாக ஓண தொகுப்பு வழங்கப்படும். அதில் ½ லிட்டர் தேங்காய் எண்ணெய், ½ கிலோ சர்க்கரை, ½ கிலோ பாசிப்பருப்பு, சேமியா பாயசம் மிக்ஸ் பாக்கெட், மில்மா நெய் 200 கிராம், முந்திரி பருப்பு, சாம்பார் பொடி, மிளகாய் பொடி, மஞ்சள் பொடி, மல்லி பொடி, தேயிலை, துவரம் பருப்பு, உப்பு தூள் உள்பட 15 பொருட்கள் அடங்கி இருக்கும். இதுதவிர ரேஷன் கார்டுதாரர்களுக்கு குறைந்த விலையில் அரிசி வழங்கப்படும். நீல நிற கார்டுதாரர்களுக்கு 10 கிலோ அரிசியும், வெள்ளை நிற ரேஷன் கார்டுதாரர்களுக்கு 15 கிலோ அரிசியும் கிலோவுக்கு 10 ரூபாய் 90 பைசா விலையில் வழங்கப்படும். இதன் மூலம் 53 லட்சம் குடும்பத்தினர் பயன் அடைவார்கள்.

96 லட்சம் ரேஷன் கார்டுதாரர்களுக்கு 10 கிலோ வீதம் கே-ரைஸ் எனப்படும் கேரள மாநில அரசு வழங்கும் அரிசி கிலோவுக்கு ரூ.25 விலையில் வழங்கப்பட உள்ளது. தற்போது இந்த அரிசி ஒரு கிலோ ரூ.29-க்கு வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மாநிலத்தில் பல இடங்களிலும் ஓண சந்தைகள் திறந்து காய்கறிகள், பழங்கள், நேந்திரங்காய் ஆகியவை குறைந்த விலையில் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்து உள்ளது.

# தன்னுடன் பணியாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தார் வைகோ

**டெல்லி, ஜூலை 25-**

மாநிலங்களவையில் இருந்து ஓய்வுபெறும் வைகோ கலைஞருக்கு நன்றி தெரிவித்தார்.

பாராளுமன்ற மேல்சபையில் எம்.பி.க்களாக இருக்கும் எம்.பி.க்களில் தி.மு.க.வை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, ம.தி.மு.க.வின் வைகோ, அ.தி.மு.க.வை சேர்ந்த சந்திரசேகரன், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ஆகிய 6 பேரின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவு பெற்றது.

மாநிலங்களவை உறுப்பினராக உள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு மீண்டும் போட்டியிட திமுக வாய்ப்பு வழங்கவில்லை. இதனால் 30 ஆண்டுகளாக நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றிய வைகோ நேற்றுடன் ஓய்வு பெற்றார். பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் மாநிலங்களவையில் வைகோ உரையாற்றினார். அப்போது நாடாளுமன்றத்தில் தன்னுடன் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி என வைகோ தெரிவித்தார். குறிப்பாக என்னை மாநிலங்களவைக்கு அனுப்பிய கலைஞருக்கும், வார்த்தெடுத்த முரசொலி மாறனுக்கும் நன்றி என வைகோ கூறினார்.

### திடீர் வெள்ளம், நிலச்சரிவு:
# தென் கொரியாவில் பலி 23 ஆக உயர்வு

**தென்கொரியா,ஜூலை 25-**

தென் கொரியா நாட்டில், கடந்த வாரம் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால், பலியானோர் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளதாக, அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவின், பல்வேறு இடங்களில் கடந்த ஜூலை 16 முதல் ஜூலை 20 ஆம் தேதி வரை தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால், அந்நாட்டின் முக்கிய மாகாணங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டு ஏராளமானோர் மாயமானதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், சான்சியோங் மாகாணத்தில் மாயமான 3 பேர் மற்றும் காபியோங் மாகாணத்தில் மாயமான ஒருவர் என மொத்தம் 4 பேரது உடல்கள், தற்போது மீட்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், மாயமானதாகக் கருதப்பட்ட 9 பேரில், மீதமுள்ள 5 பேரை தேடும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மோப்ப நாய்கள், அதிநவீன இயந்திரங்கள் ஆகிய பயன்படுத்தி இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை அந்நாட்டு மீட்புப் படையினர் தேடி வருகின்றனர். இத்துடன், தென் கொரியாவை புரட்டியெடுத்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் 21-க்கும் மேற்பட்டோர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தங்கம் விலை ரூ.1000 குறைந்தது

**சென்னை, ஜூலை 25-**

தங்கம் விலை நேற்று முன்தினம் (ஜூலை 23) ரூ.75 ஆயிரத்தை தாண்டிய நிலையில் நேற்று ஆபரணத் தங்கம் பவுனுக்கு ரூ.1000 குறைந்து விற்பனையானது.


சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாக உள்ளன. கடந்த ஜனவரி மாத தொடக்கத்தில் ஒரு பவுன் தங்கம் ரூ.58 ஆயிரமாக இருந்தது. பின்னர் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்தது. தொடர்ந்து, தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டது.

கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு பவுன் தங்கம் ரூ.74 ஆயிரத்தை தாண்டியது. தங்கம் விலை மேலும் உயரும் என்று தங்க நகை வியாபாரிகள் தெரிவித்த நிலையில், ஆபரணத் தங்கம் நேற்று ரூ.75 ஆயிரத்தை தாண்டி வரலாற்றில் புதிய உச்சத்தை பதிவு செய்தது. சென்னையில் நேற்று முன்தினம் பவுனுக்கு ரூ.760 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.75,040-க்கு விற்பனையானது. ஒரு கிராம் தங்கம் ரூ.95 உயர்ந்து ரூ.9,380-க்கு விற்கப்பட்டது. கடந்த 4 நாட்களில் மட்டும் பவுனுக்கு ரூ.2,160 வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நேற்று தங்கம் விலை பவுனுக்கு சென்னையில் ரூ.1000 குறைந்து ரூ.74,040-க்கு விற்பனையானது. கிராம் ஒன்றுக்கு ரூ.125 குறைந்து ரூ.9,255-க்கு விற்பனையானது. வெள்ளி கிராம் ஒன்று ரூ.128-க்கும், ஒரு கிலோ ரூ.1,28,000-க்கும் விற்பனையானது. தங்கம் விலை கடந்த சில தினங்களாக தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில், நேற்று பவுனுக்கு ரூ.1000 குறைந்திருப்பது வாடிக்கையாளர்களுக்கு ஆறுதல் தந்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மருத்துவர் நம்பெருமாள்சாமி மறைவு: முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



**சென்னை, ஜூலை 25-**

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் தலைவர் மருத்துவர் நம்பெருமாள்சாமி மறைவுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'புகழ்பெற்ற மருத்துவரும், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை குழுமத்தின் மதிப்புறு தலைவருமான 'பத்மஸ்ரீ' நம்பெருமாள்சாமி மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையுற்றேன். தென் தமிழ்நாட்டில் மிக எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்து, மதுரை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பையும், அமெரிக்காவில் மேல்படிப்பையும் முடித்து இந்தியாவின் முதல் விழித்திரை சிறப்பு மருத்துவர் என்ற பெயர் பெற்றவர் நம்பெருமாள்சாமி.

ஏழை எளியோருக்கும் கண்மருத்துவம் கிடைக்க வேண்டும், கண்பார்வைக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கப்பட்ட அரவிந்த் கண் மருத்துவமனையின் நிறுவனர்களில் ஒருவர் மருத்துவர் நம்பெருமாள்சாமி என்பது குறிப்பிடத்தக்கது. லட்சக்கணக்கான மக்களுக்குக் கண்பார்வை அளித்த நம்பெருமாள்சாமி அவர்களின் சேவைக்கு அங்கீகாரமாக உலகப் புகழ்பெற்ற டைம் இதழ், உலகின் செல்வாக்கு மிகுந்த 100 நபர்களில் ஒருவராகவும் இவரைத் தேர்வு செய்திருந்தது.

நம்பெருமாள்சாமியிடம் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களும் மருத்துவர்களாகி அவரது வழியில், ஏழை எளிய மக்களுக்குக் கண் சிகிச்சை அளித்து வருகின்றனர் என்ற வகையில் இத்துறையில் அவர் புரிந்துள்ள சாதனை காலத்தால் அழியாதது. பல லட்சம் பேருக்குப் பார்வையளித்த மருத்துவர் நம்பெருமாள்சாமியின் மறைவு மருத்துவத்துறைக்கும் மதுரை மக்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், மருத்துவத்துறை நண்பர்கள், பொது மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆஞ்சியோ பரிசோதனை

## அமைச்சர் துரைமுருகன் தகவல்

**சென்னை, ஜூலை 25-**

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டதாக அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். ஆஸ்பத்திரியில் இருக்கும் நிலையிலும், மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இருப்பினும் 4-வது நாளாக நேற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் சிகிச்சையில் உள்ளார். இன்னும் 2 அல்லது 3 நாட்களில் வீடு திரும்புவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில், அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை அமைச்சர் துரைமுருகன் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:- முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆஞ்சியோ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பரிசோதனையில் எந்தவொரு சிறிய அடைப்பும் இல்லை. ஆஞ்சியோ பரிசோதனைக்குப் பிறகு முதல்வர் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். ஒரு பிரச்சினையும் இல்லை. முதல்வர் எப்போது டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்பதை மருத்துவர்களே சொல்வார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# இந்திய சமூகத்தினரின் வரவேற்பால் அகம் மகிழ்ந்தேன்: பிரதமர் மோடி




**லண்டன், ஜூலை 25-**

இந்திய சமூகத்தினரின் வரவேற்பால் அகம் மகிழ்ந்தேன் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி இங்கிலாந்து நாட்டுக்கு நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றார். இதில், தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் உள்பட பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் இறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவருடைய இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதுடன், இங்கிலாந்து மன்னர் 3-ம் சார்லசையும் சந்திக்கிறார். இந்நிலையில், இங்கிலாந்து சென்றடைந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதுபற்றி அவர், உலகளாவிய வளர்ச்சிக்கு இந்தியா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் வலிமையான நட்புறவு அத்தியாவசியம் வாய்ந்தது என குறிப்பிட்டு உள்ளார். இதனை தொடர்ந்து, அவருக்கு இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பளித்தனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அவரை வரவேற்காகவும், அவரை காண்பதற்காகவும் குவிந்து இருந்தனர். இந்திய தேசிய கொடிகளை ஏந்தியபடியும், பிரதமரின் உருவம் கொண்ட புகைப்படங்களையும் சுமந்தபடி பெண்கள், சிறுமிகள் என பலர் நீண்ட வரிசையில் காத்திருந்து அவரை வரவேற்றனர்.

அவர்களுடன் பிரதமர் மோடி கைகுலுக்கி கொண்டார். இதுபற்றி அவர் வெளியிட்டு உள்ள எக்ஸ் பதிவில், இந்தியாவின் வளர்ச்சியில் அவர்களுடைய அன்பும் மற்றும் பேரார்வமும் உண்மையில் ஊக்கமளிக்கிறது என்று பதிவிட்டு உள்ளார்.

பிரதமர் மோடியின் இந்த பயணத்தில் இரு நாடுகள் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் முறைப்படி இறுதி செய்யப்படும். இதுதவிர, பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றிலும் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அஜித்குமார் கொலை வழக்கு:

# சி.பி.ஐ. முன்பு நிகிதா ஆஜர்



**மதுரை, ஜூலை 25-**

திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் மரண வழக்கில் நிகிதா முதல்முறையாக நேரில் ஆஜரானார்.

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் காளியம்மன் கோவிலுக்கு ஜூன் 27-ம் தேதி தரிசனத்துக்காக நிகிதா என்ற பெண் சென்றுள்ளார். அப்போது அவரது நகை காணாமல் போனது குறித்த புகாரில் கோவில் காவலாளி அஜித்குமாரை விசாரணைக்கென தனிப்படை போலீஸார் அழைத்துச் சென்றனர். அவர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இக்கொலை தொடர்பாக தனிப்படை காவலர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டு, டெல்லி சி.பி.ஐ. பிரிவு டி.எஸ்.பி. மோகித்குமார் தலைமையிலான குழுவினர் விசாரித்து வருகின்றனர். சம்பவ இடம், திருப்புவனம் காவல் நிலையம், கோவில் என பல இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இந்தநிலையில், திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் மரண வழக்கில், அஜித்குமார் மீது புகார் அளித்த நிகிதா முதல்முறையாக மதுரை சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜரானார். நிகிதாவிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

# தமிழகம் வரும் பிரதமர் மோடியை சந்திக்கிறார் எடப்பாடி பழனிசாமி?



**சென்னை, ஜூலை 25-**

தமிழகம் வரும் பிரதமர் மோடியை சந்திக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பிரதமர் மோடி வருகிற 26 மற்றும் 27-ந் தேதி என 2 நாட்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்கிறார். அவர் 26-ந் தேதி மாலத்தீவில் இருந்து புறப்பட்டு இரவு 7.50 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் வருகிறார். அங்கு அவர் விரிவாக்கப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைக்கிறார்.

பின்னர் இரவு திருச்சி செல்கிறார். அங்கு இரவு தங்குகிறார். 27-ந் தேதி அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் நடக்கும் ஆடித் திருவாதிரை விழாவில் பங்கேற்கிறார். அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு பகல் 2.25 மணிக்கு பிரதமர் மோடி திருச்சியில் இருந்து டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

தமிழகம் வரும் பிரதமர் மோடியை சந்திக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதாவது அவர் திருச்சியில் 26-ந் தேதி இரவு அல்லது 27-ந் தேதி காலையில் பிரதமர் மோடியை சந்திப்பார் என்று கூறப்படுகிறது. பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டணி ஏற்பட்ட பிறகு எடப்பாடி பழனிசாமி, பிரதமர் மோடியை சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த சந்திப்பு நிகழ்ச்சிக்காக எடப்பாடி பழனிசாமி 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தனது பிரசாரத்தை மாற்றி அமைத்து உள்ளார். இந்த சந்திப்பின் போது கூட்டணி ஆட்சி தொடர்பாக நடைபெற்று வரும் கருத்து மோதல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக எடப்பாடி பழனிசாமி பிரதமர் மோடியுடன் பேசுவார் என்று தெரிகிறது. அதேபோல தி.மு.க. மீதான மத்திய அரசின் புலனாய்வு அமைப்புகள் போட்டுள்ள வழக்குகளை வேகப்படுத்த எடப்பாடி பழனிசாமி கேட்டு கொள்வார் என்று கூறப்படுகிறது.

## பீகாரில் நடைபெற்று வரும்

# வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு: சோனியா காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டம்




**புதுடெல்லி, ஜூலை 25-**

இந்திய தேர்தல் ஆணையம் பீகாரில் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற வளாகத்தில் சோனியா காந்தி தலைமையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரின் 4-ம் நாளான நேற்று (ஜூலை 24), பாராளுமன்றம் கூடுவதற்கு முன்பாக மகர் துவார் பகுதியில் கூடிய எதிர்க்கட்சி எம்பிக்கள், பீகாரில் இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் சிறப்பு தீவிர ஆய்வு (எஸ்.ஐ.ஆர்.) என்ற பெயரிலான வாக்காளர் பட்டியல் திருத்தத்தை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். காங்கிரஸ் பாராளுமன்றக் குழு தலைவர் சோனியா காந்தி, வயநாடு எம்பி பிரியங்கா காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், மக்களவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கவுரவ் கோகாய், சிவ சேனா (உத்தவ் பிரிவு) எம்பி பிரியங்கா சதுர்வேதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் எம்பி மனோஜ் ஜா, திமுக எம்பி ஆ ராசா, சமாஜ்வாதி கட்சி எம்பி ஜியாவுர் ரகுமான் பார்க், திரிணமூல் காங்கிரஸ் எம்பி கீர்த்தி ஆசாத் உள்ளிட்ட ஏராளமான எம்பிக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# குழந்தைகளை கொன்ற குன்றத்தூர் அபிராமிக்கு சாகும் வரை சிறை

## காஞ்சிபுரம் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு



**காஞ்சிபுரம், ஜூலை 25-**

2 குழந்தைகள் கொலை செய்யப்பட்ட வழக்கில் அபிராமி மற்றும் கள்ளக்காதலன் சுந்தரத்துக்கு ஆயுள் தண்டனை விதித்து உத்தரவு நீதிபதி பிறப்பித்தார்.

குன்றத்தூர் அடுத்த மூன்றாம் கட்டளை பகுதியை சேர்ந்தவர் விஜய். இவர் தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றி வந்தார். இவரது மனைவி அபிராமி. இந்த தம்பதிக்கு அஜய் (6) என்ற மகனும் கார்னிகா (4) என்ற பெண் குழந்தையும் இருந்தனர். டிக் டாக்கில் வீடியோ பதிவிட்டு பிரபலமான அபிராமிக்கு அப்பகுதியில் பிரியாணி கடையில் பணியாற்றி வந்த சுந்தரம் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இவர்களது கள்ளக்காதல் விவகாரம் கணவரான விஜய்க்கு தெரியவர அவர் கண்டித்துள்ளனர். இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அபிராமி சுந்தரத்துடன் சேர்ந்து வாழ முடிவெடுத்து இதற்கு தடையாக உள்ள கணவன் மற்றும் குழந்தைகளை கொலை செய்ய முடிவு செய்தார்.

கடந்த 2018-ம் ஆண்டு தனது 2 குழந்தைகள் மற்றும் கணவருக்கு பாலில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்துள்ளார். இதில் அதிர்ஷ்டவசமாக விஜய் உயிர் தப்பினார். இருப்பினும் 2 குழந்தைகளும் உயிரிழந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக கணவர் விஜய் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதனையடுத்து வழக்குப்பதிவு செய்த போலீசார் அபிராமியை தேடிவந்தனர். அப்போது கள்ளக்காதலன் சுந்தரத்துடன் தப்பி செல்ல முயன்ற அபிராமியை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கு தொடர்பாக நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது, பெற்ற குழந்தைகளை கொன்ற தாய் அபிராமி தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி என்றும் கொலைக்கு உடந்தையாக இருந்த அபிராமியின் கள்ளக்காதலன் சுந்தரமும் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து, அபிராமி மற்றும் கள்ளக்காதலன் சுந்தரத்துக்கு தண்டனை விவரங்களை சற்று நேரத்தில் அறிவிப்பதாக கூறிய நீதிபதி, இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.

**கண் தானம் செய்வீர்**

## 100 சதவீத உறுதியான ஆதாரம் உள்ளது:

# தேர்தல் ஆணையம் எங்களிடம் இருந்து தப்ப முடியாது: ராகுல்



**புதுடெல்லி, ஜூலை 25-**

தேர்தல் ஆணையமோ அதன் அதிகாரிகளோ எங்களிடம் இருந்து ஒருபோதும் தப்ப முடியாது என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் கடந்த 21-ந்தேதி தொடங்கியது. கூட்டத்தொடரின் முதல் நாளில் இருந்து, இரு அவைகளிலும் பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) பற்றி எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பி வருகின்றன.

பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் தொடங்கி 3 நாளாக அவை நடவடிக்கைகள் முடங்கின. இந்நிலையில், 4-வது நாளாக அவை நேற்று கூடியது. இரு அவைகளை சேர்ந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள், கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும் உடனடியாக அவையை ஒத்திவைத்து விட்டு, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் பற்றி விவாதிக்க கோரியும் அவையில் நோட்டீஸ் அளித்தனர். ஆனால், அவர்களுடைய நோட்டீஸ்கள் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டன.

தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால் நேற்றும் அவை நடவடிக்கைகள் முடங்கின. மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையில் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- "கர்நாடகாவில் ஒரு இடத்தில் தேர்தல் ஆணையம் மோசடிக்கு துணை நின்றது என்பதை நிரூபிக்க எங்களிடம் 100 சதவீத உறுதியான ஆதாரம் உள்ளது. ஒரு தொகுதியில் 45, 50, 60, 65 வயது கொண்ட ஆயிரக்கணக்கான புதிய வாக்காளர்கள் இ ணை ந்துள்ளனர். என்ன நடந்து கொண்டிருக்கிறது? தேர்தல் ஆணையம் வசமாக சிக்கிக் கொண்டது. தேர்தல் ஆணையத்திற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன். நீங்களோ, உங்கள் அதிகாரிகளோ எங்களிடம் இருந்து ஒருபோதும் தப்ப முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



**2026-ம் ஆண்டு தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் சுதந்திரமான, நியாயமான மற்றும் நேர்மையான முறையில் நடைபெற வலியுறுத்தி புதுடெல்லியில் இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஜெயகுமார், சிவி. சண்முகம், ராஜ்யசபா எம்.பி. இன்பதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.**

## சென்னையில் இருந்து தைலாபுரத்திற்கு

# பா.ம.க. தலைமையகம் மாற்றம்: ராமதாஸ்

**விழுப்புரம், ஜூலை 25-**

சென்னையில் இருந்து பா.ம.க. தலைமையகம் விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக ராமதாஸ் அறிவித்துள்ளார்.

தைலாபுரத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது:- சென்னையில் இருந்து பா.ம.க. தலைமையகம் விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பா.ம.க.வின் தலைமை அலுவலகம் தைலாபுரம் இல்லத்தில் தான் செயல்படுகிறது. சென்னையிலோ வேறு பகுதியிலோ தலைமை அலுவலகம் வைத்திருந்தால் அது சட்டத்திற்கு புறம்பானது.

பனையூரில் பா.ம.க. தலைமையகம் இருப்பதாக சொல்வது, தாங்களாகவே நிர்வாகிகளை நியமனம் செய்து கொண்டு செயல்படுவது சட்டவிரோதமானது. கட்சி தலைமைக்கு கட்டுப்படாதவர்கள் உடனடியாக கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்

சிறப்பு பொதுக் குழுவின்படி பா.ம.க.வின் செயல் தலைவராக அன்புமணி தொடர்வார். தன்னை 'தலைவர்' எனக் கூறிகொண்டால் நடவடிக்கை பாயும். என்னை தவிர யாரும் உரிமை கோர முடியாது. மே மாதம் முதல் பா.ம.க.வின் தலைவர் ராமதாஸ், கவுரவ தலைவராக ஜி.கே.மணி, செயல் தலைவராக அண்புமணி என பொறுப்புகள் வழங்கப்பட்டு, புதிய பொறுப்பாளர்கள் பட்டியல் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பட்டு உள்ளது. கட்சியின் முக்கிய பொறுப்புகளுக்கு யாராவது, 'நான்தான்' என பவனி வந்தால் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். பா.ம.க. கொடியை யாரும் பயன்படுத்தக் கூடாது, என் பெயரை யாரும் பயன்படுத்தக் கூடாது, இனிஷியல் போட்டுக் கொள்ளலாம். அன்புமணியின் நடைப்பயணத்தால் வட தமிழகத்தில் சட்ட ஒழுங்கு பிரச்னைக்கு ஏற்பட வாய்ப்புள்ளதால் அதற்கு தடைவிதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்தியனாக எனக்கு கொடுக்கப்பட்ட கடமையை செய்ய உள்ளேன். பெருமையோடு டெல்லி செல்கிறேன். பாராளுமன்றத்தில் கன்னிப்பேச்சு குறித்து இப்போது சொல்ல முடியாது. உங்கள் வாழ்த்துகள், மக்கள் வாழ்த்துகளுடன் டெல்லி சென்று உறுதிமொழி ஏற்க உள்ளேன் என்றார்.

**- கமல்ஹாசன்**



இனியும் குழு அமைக்கிறோம், கருத்துக்களைக் கேட்கிறோம், ஆய்வு செய்கிறோம் எனக் காரணங்களை அடுக்கி காலத்தைத் தாழ்த்தாமல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**



தமிழக ஆட்சியாளர்களுக்கு சமூகநீதி ஞானம் எப்போது தான் பிறக்கும்? தமிழ்நாட்டில் உடனடியாக சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தவும், அதனடிப்படையில் அனைத்துத் தரப்பினருக்கும் முழுமையான சமூகநீதி வழங்கவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- அன்புமணி**



மனித வாழ்க்கையில், நாம் தோல்வி, ஏமாற்றம் மற்றும் துரோகங்களை எதிர்கொள்ளலாம், ஆனால் அதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை. நான் ஒருபோதும் அடிபணியவோ அல்லது சமரசம் செய்யவோ மாட்டேன், தமிழீழ விடுதலைக்காக என் வாளை உயர்த்துவேன்.

**- வைகோ**



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும் மாவட்ட சிறுபான்மையினர் பிரநிதிகள், பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடான கலந்தாய்வுக் கூட்டம் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மாவட்ட காவல் துணை ஆணையர் ஜி.எஸ் அனிதா , மாநில சிறுபான்மையினர் ஆணையம் துணைத் தலைவர் எம்.எம்.அப்துல் குத்தூஸ், சிறுபான்மையினர் நலத்துறை துணை இயக்குநர் எஸ்.ஷாமிளி, மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் சு.வசந்த், எம்.ரமீத் கபூர், ஹேமில்டன் வெல்சன், ஏ.சுவர்ணராஜ், நாகூர் அஹநஜிமுதீன், பிரவீன் குமார் டாட்டியா, ராஜேந்திர பிரசாத், ஜெ.முகம்மது ரபி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் டி.அரசபட்டியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு 2 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த பாண்டி - போதும் பொண்ணு தம்பதியரின் 16 வயது மகன் கௌதமின் பார்வைக் குறைபாடு நீக்க மருத்துவ சிகிச்சைக்காக மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் வழங்கினார்.உடன் மாவட்ட நிர்வாகிகள், கள்ளிக்குடி வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.

## முனிச்சாலை சரவணன் ஏற்பாட்டில் மதுரையில் சாலையோர வியாபாரிகளுக்கு குடைகளை டாக்டர் சரவணன் வழங்கினார்



மதுரை, ஜூலை 26-

மதுரையில் சாலையோர வியாபாரிகளுக்கு முனிச்சாலை சரவணன் ஏற்பாட்டில் குடைகளை டாக்டர் சரவணன் வழங்கினார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் பிறந்த நாளை முன்னிட்டு, மதுரை மாநகர் தெற்கு தொகுதி அதிமுக பிரமுகர் முனிச்சாலை சரவணன் ஏற்பாட்டில் முனிச்சாலை, காமராஜர் சாலை, பழைய குயவர்பாளையம், தவிட்டுச்சந்தை, சிம்மக்கல், யானைக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாலையோர வியாபாரிகளை வெயிலில் இருந்து காக்கும் விதமாக, 50-க்கும் மேற்பட்டோருக்கு எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி படம் பொறித்த மெகா குடைகள் வழங்கும் நிகழ்ச்சியை அதிமுக மருத்துவ அணி மாநில இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் தொடங்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் பைக்காரா செழியன், ராமசுப்பு, ராமமூர்த்தி, சுந்தர், நேருநகர் கணேசன், ரஞ்சித் முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கமுதி அ.தி.மு.க. தெற்கு ஒன்றியம் சார்பில் எடப்பாடியை வரவேற்க ஆலோசனை கூட்டம்

கமுதி, ஜூலை 25-

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற மக்கள் சந்திப்பு கூட்டத்திற்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி எழுச்சி பயணம் சம்பந்தமாக ஆலோசனை கூட்டம் கமுதி தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி.காளிமுத்து, கமுதி நகர் செயலாளர் சிங்க குட்டி மணிமுருகன் ஆகியோர் ஏற்பாட்டில் தனியார் மகாலில் மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி தலைமையில் விவசாய பிரிவு இணை செயலாளர் பெரியசாமி தேவர், சண்முகைபாண்டியன், மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் செல்வமேரி, முதுகுளத்தூர் மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.டி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் ஒவ்வொரு அ.தி.மு.க. பூத்திற்கும் 200 நபர்கள் வீதம் தெற்கு ஒன்றியம் சார்பில் பத்தாயிரம் நபர்கள் கலந்து கொண்டு பிரம்மாண்டமான வரவேற்பு கொடுக்க வேண்டிம் என பேசினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் பசும்பொன் தமிழ் வாணன், மாவட்ட எம்.ஜி.ஆர். இணைச் செயலாளர் இருளாண்டி, முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர்கள் மூர்த்தி, அன்பரசு, மாவட்ட அம்மா பேரவை துணைத்தலைவர் டேவிட் பிரதாப் சிங், மாவட்ட நிர்வாகிகள் பூமிநாதன், ஏழுமலை, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணை செயலாளர் வழி விட்டான், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் எஸ்,ராமநாதன்பொதுக்குழு உறுப்பினர் முனியசாமி ஒன்றிய நிர்வாகிகள் சம்பகுளம் மாரிமுத்து,வில்வதுரை, நந்திசேரி சக்திவேல், ஆறுமுகம், செல்லம், போஸ், கணேசன் , நிர்மல்குமார், வீரபாண்டி, கண்ணையா, சாமுவேல், மலைச்சாமி, கண்ணன், ராமசந்திரன், ராஜபாண்டி, உடப்பங்குளம் செல்லம், பாம்புல்யான், தங்கம், ராஜாராம், சத்தியேந்திரன், மனோகரன், ராமராசு, ரவி, பசும்பொன் முருகன், பொன்னு பாண்டி,மகாலிங்கம், நேரு, கரிசல்புளி பாண்டி,வேடங் கூட்டம் ஆறுமுகம், முத்து, பால்ராஜ், வழிவிட்டான், வேந்தன், ஜெபிஆர் என்ற ஜெயராமன், மூவர்,அழகர், அரசு, காசிநாதன், முத்துராமலிங்கம், அரசன், இஸ்மாயில், கோட்டை ஜோதி, நரசிங்கம்,மகளிர் அணி நிர்வாகிகள் பத்ரகாளி, அமுல்ராணி, மீனாட்சி, பொம்மி,நகர கழக நிர்வாகிகள் அக்னி கருப்பசாமி, கந்தசாமி, ராமநாதன், அப்பாஸ், சாதிக், கோபால், கண்ணன், முனியசாமி மற்றும் கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வெங்கலநாச்சி அம்மன் கோவிலில் அன்னதானம்



நத்தம், ஜூலை 25-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டுப்பட்டி- துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வெங்கலநாச்சி அம்மன் கோவிலில் ஆடி அமாவாசை தின விழா நடந்தது.இதையொட்டி அம்மனுக்கு வண்ண பூமாலைகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.

தொடர்ந்து கோவில் வளாகத்தில் பக்தர்கள் நேர்த்திக் கடனாக கொடுத்த 50 சிப்பம் அரிசியில் சாதம் சமைக்கபட்டு காய்கறி கூட்டுடன் சைவ உணவு அன்னதானம் வழங்கப்பட்டது.இதில் சுற்றுவட்டார கிராம பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஒத்தினிப்பட்டி, லெட்சுமணபுரம், பஞ்சயம்பட்டி, ஓ.புதூர் ஊர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

## 2025 துபாய் கிராண்ட் சம்மர் சேல் அறிமுகம்

சென்னை, ஜூலை 25-

துபாய் விழாக்கள், வணிக நிகழ்வுகள் மற்றும் சில்லறை விற்பனையை மேம்படுத்தும் அரசாங்க அமைப்பாகும். (டிஎப்ஆர்இ) தலைவர் அகமது அல் காஜா தெரிவித்தபடி, துபாயின் 28-வது கோடை சலுகை திருவிழா டிஎஸ்எஸ் 2025 மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

இதன் முக்கிய நிகழ்வாக கிராண்ட் துபாய் கோடைக்கால விற்பனை (ஜிடிஎஸ்எஸ்) ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 10 வரை நடக்கிறது. 3,000 கடைகள், 800 பிராண்டுகள், 90% வரை தள்ளுபடி வழங்குகின்றன. தொடக்க நாளில் 12 மணி நேர சிறப்பு விற்பனை நடைபெறுகிறது. ஏஇடி 300 செலவில் மில்லியன் டிரா பரிசுகள், நிஸான் பேட்ரோல் எஸ்.யூ.வி. காரை வெல்லும் வாய்ப்பு மற்றும் விசா கார்டு ரிவார்ட்ஸ் பெறலாம்.

முக்கிய மால்களில் எஸ்யுவி கார்கள், நகை, வாட்ச் சலுகைகள் உள்ளன. மோடேஷ், டானா போன்ற குழந்தைகள் நிகழ்ச்சிகள்,மெஸ்ஸி அனுபவம், ஸ்பேஸ்டூன் நினைவுகள் போன்ற கலாச்சார நிகழ்வுகள். நடாலி இம்ப்ரூக்லியா, ரஹத் ஃபதே அலி கான், அதுல் காத்ரி போன்ற கலைஞர்களின் நேரடி நிகழ்ச்சிகள்.

சிறப்பு உணவு சலுகைகள் கிளாப், சிக் நோன்னா, ரூயா உள்ளிட்ட பிரமாண்ட விருந்துகள். டி.எஸ்.எஸ் எண்டர்டெயின்மென்ட் ஆப்மூலம் 7,500+ போகோ சலுகைகள். 100+ ஹோட்டல்களில் சம்மர் பேக்கேஜ் மற்றும் சர்ப்ரைஸ் பெர்க்ஸ். டிஎஸ்எஸ் 2025 என்பது ஷாப்பிங், உணவு, கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு கொண்ட முழுமையான அனுபவம்.

## தெற்காசியாவில் 1,000 பள்ளிகளை நிறுவிய கேம்பிரிட்ஜ், இரட்டைக் கொள்கையை முன்னெடுக்கும் பயணம்

மதுரை, ஜூலை 25-

கேம்பிரிட்ஜ் யூனிவர்சிட்டி பிரஸ் அண்ட் அசெஸ்மென்ட் (கேம்பிரிட்ஜ்) அமைப்பின் சர்வதேச கல்விப் பிரிவு, தென் ஆசியா முழுவதும் 1,000-க்கும் மேற்பட்ட கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளிகளைக் கடந்துள்ள முக்கிய சாதனையை இன்று அறிவித்தது.

இந்த எண்ணிக்கையில், இந்தியாவில் மட்டும் 800-க்கும் மேற்பட்ட பள்ளிகள் கேம்பிரிட்ஜ் பாடத்திட்டங்களை வழங்குகின்றன. 2023–24ஆம் கல்வியாண்டில் 894 பள்ளிகள் இருந்த நிலையில், 2024–25ஆம் ஆண்டில் இது 16% வளர்ச்சியுடன் 1,034 ஆக அதிகரித்துள்ளது, இதில் புதிய பள்ளிகளில் 81% இந்தியாவில் நிறுவப்பட்டுள்ளன. தெற்காசியாவில் உள்ள கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளிகளில் 75%-க்கும் அதிகமானவை இந்தியாவில் அமைந்துள்ளன.

அதனை அடுத்து 12% கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளிகள் பங்களாதேஷில் அமைந்துள்ளன. புனேயில் உள்ள ப்ரம்மப்ரியா வேர்ல்ட் ஸ்கூல், தெற்காசியாவின் 1000வது கேம்பிரிட்ஜ் பள்ளியாக இணைந்துள்ளது. கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளிகளில் 53% பள்ளிகள் அடுக்கு 1 நகரங்களில் அமைந்துள்ளன.

இந்தியாவின் தென்பகுதியில் உள்ள சிறிய நகரங்களில் கேம்பிரிட்ஜ் பள்ளிகள் அதிக அளவில் நிறுவப்பட்டுள்ளன. அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் மொத்தமாக 47% பள்ளிகள் அமைந்துள்ளன. இது மெட்ரோ நகரங்கள் மட்டுமல்லாது, சிறிய நகரங்களிலும் மற்றும் கிராமப்புறங்களிலும் சர்வதேச கல்வி பரவிக் கொண்டிருப்பதை காட்டுகிறது. இது குறித்து தெற்காசியாவிற்கான சர்வதேச கல்விப் பிரிவின் மூத்த துணைத் தலைவர் வினய் சர்மா கூறுகையில், தெற்காசியாவில் 1,000 பள்ளிகளைத் தாண்டியமை, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிகாரமளிக்கும் உலகத் தரமுள்ள கல்வியை வழங்கும் நமது உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இந்தியாவில் மட்டும் 800-க்கும் மேற்பட்ட கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளிகள் செயல்பட்டு வருவது இப்பகுதியில் கல்வியில் புதுமை, அனைவரையும் உள்ளடக்குவது மற்றும் தரமான கல்வியை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய பங்காளராக நாங்கள் இருப்பதில் பெருமைப்படுகிறோம் என்று கூறினார்.

## சத்யராஜ், ரம்யா கிருஷ்ணனுடன் விப்ரோ ஜிஃபியின் டிஷ்வாஷ்-இன் பாகுபலி டிவி விளம்பரம் வெளியீடு

சேலம், ஜூலை 25-

விப்ரோ கன்சியூமர் கேர் அண்ட் லைட்டிங்கின் பிரபல டிஷ்வாஷ் ஜெல் பிராண்டான ஜிஃபி, தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் சத்யராஜ் மற்றும் ரம்யா கிருஷ்ணன் ஆகியோரை இணைத்துத் தயாரித்துள்ள புதிய டிவி விளம்பரத்தை வெளியிட்டுள்ளது. பாகுபலி பாணியில் உருவாக்கப்பட்ட இந்த விளம்பரம், தினசரி பாத்திரம் கழுவுவதை ஒரு நம்முடைய வீரபரம்பரை போல சித்தரிக்கிறது.

இந்த காமெடிப் பாணி விளம்பரத்தில், சத்யராஜ் ஒரு அமைதியான சமையல்காரராக இருந்து சமையலறை வீரராக மாறுகிறார், ரம்யா கிருஷ்ணனோ தனது அதிகார பாணியில் மோதலுக்கு தயாராகிறார். இருவரும் இணைந்து, கடினமான கிரீஸுக்கு எதிராக ஜிஃபியின் சக்திவாய்ந்த கிளீனிங் திறனை வெளிக்கொணர்கிறார்கள்.

ஜிஃபியின் மேம்படுத்தப்பட்ட ஃபார்முலா 50% அதிகம் திறம்பட கிரீஸை அகற்றும் வல்லமை கொண்டது. இது எலுமிச்சை, கிரீன் லைம், மற்றும் என்சைம்ஸ் என மூன்று புத்துணர்ச்சியூட்டும் வகைகளில் கிடைக்கிறது. சமையலறையில் சுத்தமான நறுமணத்தையும், கறையற்ற பாத்திரங்களையும் வழங்குகிறது.

இந்த தயாரிப்புகள் ரூ.205-க்கு 750 மில்லி பாட்டிலாகவும், ரூ.420-க்கு 2 லிட்டர் ரீஃபில் பேக்காகவும் கிடைக்கின்றன. அமேசான், பிளிப்கார்ட், பிக் பேஸ்கட், ஜியோ மார்ட் மற்றும் அனைத்து முன்னணி சில்லறை கடைகளிலும் வாங்கலாம். குறுகிய காலத்துக்கு அனைத்து எஸ்கேயூகளிலும் 50% வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது.





மதுரை மாநகர் மேற்கு 4- ம் பகுதி 69- வது வட்ட அ.தி.மு.க.சார்பில் கிழக்கு வட்டசெயலாளர் பி.கருணா தலைமையிலும், பகுதி செயலாளர் எம்.முத்துவேல் முன்னிலையிலும் சொக்கலிங்கநகரில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், எம்.எஸ்.கே.மல்லன், பைக்காரா கருப்பசாமி, வி.பி.ஆர்.செல்வகுமார், ஏ.பார்த்திபன், பேராசிரியர் ஜெயபால், ஓட்டுரணி திருமுருகன், ஏ.தங்கபாண்டி, எஸ்.எம்.டி.ரவி, இளைஞரணி கண்ணன், வேளாங்கண்ணி, ராம்குமார், எல்எஸ்எஸ்.பாலாஜி, ஜி.முத்துகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## திருமங்கலம் அரசு கல்லூரியில் போதைப்பொருள் தடுப்பு-பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி





திருமங்கலம்,ஜூலை 25-

திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் போக்சோ பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு சிறப்புடன் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் வே.மீனா வரவேற்புரையாற்றினார்.கல்லூரியின் முதல்வர் சிங்காரவேலன் தலைமையேற்று உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் அலுவலக அதிகாரி சுமா பெண்களுக்கான பாதுகாப்புகள் குறித்து உரையாடினார்.குழந்தைகள் நலவாரிய அலுவலர் ராஜாராம் இந்த பெண் குழந்தைகளுக்கு எதிராக நடைபெற்றிடும் பிரச்சனைகளை எடுத்துக் கூறியதுடன் போக்சோ சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.பின்னர் ஆள் கடத்தல் மற்றும் குற்றப்பிரிவு அலுவலர் ஸ்ரீவிஜய தேவி பெண்களின் வாழ்வியல் முன்னேற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி உரையாற்றினார்.

இதையடுத்து காவல் துறை துணை கண்காணிப்பாளர் ராமகிருஷ்ணன், பெண்கள் எப்படி தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்கள் எப்படி பாதுகாப்பாக இருப்பது என்பது பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவ மாணவிகளிடையே சிறப்புரையாற்றினார். பின்னர் சார்பு ஆய்வாளர் இரண்யகுமார் மாணவ மாணவிகளுக்கு போதை பொருள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வின் நிறைவில் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் தனலட்சுமி நன்றி கூறினார்.இந்நிகழ்வினை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மு.ஜெகநாதன் சிறப்புடன் ஏற்பாடு செய்திருந்தார். ஆங்கிலத் துறை முதலாம் ஆண்டு மாணவி பவித்ரா தொகுத்து வழங்கிய இந்நிகழ்வில் அனைத்து துறை தலைவர்கள் , பேராசிரியர்கள் நாட்டு நல பணி திட்டம் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணன் கோவில் கலசலிங்கம் பல்கலை கழகம் உலக சாதனைப்புத்தகத்தில் இடம் பெற்று சாதனை



விருதுநகர், ஜூலை 25-

சென்னை உலகத் திருக்குறள் மையம் சார்பில் உலக அளவில் நூறு நிறுவனங்களில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. கலசலிங்கம் பல்கலையிலும் தமிழ்மன்றம் சார்பில் திருக்குறள் மாநாடு நடந்து திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு, மற்றும் பல போட்டிகள் நடைபெற்றன. இதனை பாராட்டி ,லண்டன் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து அதற்கான சான்றிதழை சென்னை ,உலகத் திருக்குறள் மையத் தலைவர் முனைவர் மோகன்ராஜ் வழங்க, பல்கலை கழக தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் சங்கீதா பெற்றுக் கொண்டார்.

உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றமைக்கும், ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்த பேராசிரியர்களுக்கும் பல்கலை வேந்தர் ஸ்ரீதரன், இணை வேந்தர் டாக்டர் அறிவழகிஸ்ரீதரன் சான்றிதழ் வழங்கி பாராட்டினர்.

துணை வேந்தர், நாராயணன், பதிவாளர் வாசுதேவன், ஆராய்ச்சி துறை இயக்குநர் பள்ளிகொண்ட ராஜசேகர்,மாணவர் நல இயக்குநர் பாலக் கண்ணன், கலசலிங்கம் கலைக் கல்லூரி முதல்வர் கோபாலகிருஷ்ணன், கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ் மன்ற மாணவர்கள் செய்திருந்தனர்.



திருச்சுழி ஆற்றங்கரையில் ஆடி அமாவாசையை முன்னிட்டு பொதுமக்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து திருமேனி நாதர் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர்.



சதுரகிரி மலையில் எழுந்தருளிய சுந்தர மகாலிங்க சுவாமிக்கும் சந்தன மகாலிங்க சுவாமி சுந்தரமூர்த்தி சுவாமி பலாவடி கருப்பசாமி ஆகியோருக்கு அதிகாலையில் சிறப்பு பூஜைகளுடன் வழிபாடும் அதன் பின்னர் பக்தர்கள் முன்னிலையில் நண்பகல் அபிஷேக வழிபாடும் நடைபெற்றது.

# விவசாயிக்கு கத்திகுத்து

நத்தம், ஜூலை 25-

நத்தம் அருகே செல்லப்ப நாயக்கன்பட்டி ஊராட்சி கர டிப்பட்டியை சேர்ந்தவர் எழு வன்( 70) விவசாயி. இவர் தனது வீட்டின் அருகே 3 ஆடு கள் வளர்த்து வருகிறார். இந் நிலையில் கடந்த 22-ம் தேதி இரவு ஆடுகளை பட்டியில் அடைத்து விட்டு வீட்டிற்கு தூங்க சென்றுவிட்டார். தூங்க சென்ற சிறிது நேரத்தில் ஆடு கள் கத்தும் சத்தம் கேட்டது. இதைக் கேட்டு வெளியே வந்து பார்த்த போது மூங்கில் பட்டியை சேர்ந்த அழகுமுத்து(30, மகேந்திரன்(17) மலைச் சாமி(17) ஆகியோர் ஆடு களை திருட முயன்றனர். இதைப் பார்த்த எழுவன் அக் கம்பக்கத்தினரை எழுப்புவ தற்காக கூச்சலிட்டுள்ளார். இதில் ஆத்திரமடைந்த 3 பேரும் எழுவனை கத்தியால் குத்திவிட்டு தப்பியோடி விட் டனர். இச்சம்பவம் குறித்து எழுவன் நத்தம் போலீசில் புகார் செய்தார்.அதன்பேரில் போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

சார்பு நீதிமன்றம்,
திண்டுக்கல்
O.S.No. 349/2023
பாரத ஸ்டேட் வங்கி
வத்தலக்குண்டு கிளை
அதன் கிளை மேலாளர் மூலம்
...... மனுதாரர்
/எதிர்/
திரு.M.அழகர், த/பெ,மாமுண்டி,
எண். 13-2-2, பாரதியார் தெரு,
நிலக்கோட்டை, நிலக்கோட்டை
தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.
...... பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி நம்பரில் வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய பரிகாரம் கோரி தாக்கல் செய்த தாவா வழக்கு வருகின்ற 13.08.2025ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் உமக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தாவன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் உம்மீது ஒருதலைபட்சமாகத் தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
L.பாரதி, M.L.,
A.யாசர் அராபத், M.A., B.L.,
அட்வகேட்ஸ், திண்டுக்கல்.

# பெரிய பொக்கம்பட்டி கிராமத்தில்
# இறையன்பு நூலகத்தின் புதிய கிளை திறப்பு

திருமங்கலம், ஜூலை 25-

திருமங்கலம் அருகே யுள்ள பெரிய பொக்கம் பட்டி கிராமத்தில் மக்களின் பயன்பாட்டிற்கென இறை யன்பு நூலகத்தின் 15வது கிளை நேற்று திறந்து வைக் கப்பட்டது.

மதுரை மாவட்டம், திரு மங்கலம் நகரில் செயல் பட்டு வரும் இறையன்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் பார்த்தசாரதி யின் சிறப்பான ஏற்பாட்டின் பேரில்15வது கிளை நூலக மாக பெரியபொக்கம்பட்டி கிராமத்தில் இறையன்பு நூல கத்தின் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஊர் முதன் மைக்காரர் ஆதிநாராயணன் தலைமை வகித்து ஆலோச னைகள் வழங்கி பேசினார். கிராம பிரமுகர் சீனிவாசகன் முன்னிலை வகித்தார்.விழா வில் துரைச்சாமி, சமூக ஆர் வலர் சிவரக்கோட்டை ஆதி மூலம்,திருமங்கலம் ரெட் கிராஸ் சொசைட்டி செயலா ளர் மகாலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசி னார்கள். விழாவில் சிவகிரி சித்தர் கிரிதரன் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியின் முக் கிய அம்சமாக நூலகத்தின் பொறுப்பாளர்களில் ஒருவ ரான சங்கர் தனது வீட்டில் நூலகம் செயல்படுவதற்கு இலவசமாக தந்துள்ளார். மேலும் 100 நூல்கள் முதல் கட்டமாக கிளை நூலகத்தின் பொறுப்பாளரிடம் வழங்கப் பட்டது. இந்நிகழ்ச்சியை அறங்காவலர் பார்த்தசாரதி தலைமையில் கிளை நூலகப் பொறுப்பாளர்கள் சிறப்பு டன் ஒருங்கிணைத்தனர். இந் நிகழ்ச்சியில் கிராம மக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழா வின் நிறைவில் நூலக பொறுப்பாளர் பாண்டுரங் கன் நன்றி கூறினார். முன்ன தாக தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் செயல் பட்டு வரும் இறையன்பு நூலகத்தில் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஒரு வாரத்தில் அரை நாள் வீதம் ஆண்டுக்கு 30 வாரங்கள் திருக்குறள் பயிற்சி வகுப்புகள் விரை வில் நடத்தப்பட உள்ளது. இதில் மாணவர்கள் தமிழார் வலர்கள் மற்றும் பொதுமக் கள் என விருப்பமுள்ள அனைவரும் இந்த திருக்கு றள் பயிற்சியில் கலந்து கொண்டு பயனடையுமாறு இறையன்பு நூலக அறங்கா வலர் பார்த்தசாரதி செய்தியா ளர்களிடம் தெரிவித்தார்.

# வேட்டையன் குறி வைத்தால் தப்பாது என்பது போல எடப்பாடி பழனிசாமி குறி வைத்தால் வெல்வார்

## எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி

மதுரை, ஜூலை 25-

மதுரை தெப்பக்குளம் பகு தியில் உள்ள முக்தீஸ்வரர் கோவிலில் ஆடிமாவாசை யொட்டி மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் சார்பில் அதன் நிறுவனர் நெல்லை பாலு ஏற்பாட்டில் பொதுமக்க ளுக்கு முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அன்னதா னம் வழங்கினார்.

பின்னர் எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி. உதயகுமார் நிருபர்களிடம் கூறியதாவது-

எடப்பாடி பழனிசாமி தவெக நாதகவுக்கு தொடர்ந்து ஏன் அழைப்பு விடுக்கிறார். அவர்கள் அதை நிராகரித்துள்ள னர் என்ற கேள்விக்கு,அதிமுக பிரதான கட்சி திமுகவை எதிர்க் கிறது. தவெக, நாதக, பாமக, அன்புமணி, ராமதாஸ் திமு கவை எதிர்க்கிறார்கள். எதிர்க் கும் எல்லோரும் ஒன்று சேர்த் தால் தான் அந்த நோக்கம் நிறை வேறும்.திமுகவில் இருக்கும் கம்யூனிஸ்ட், திருமாவளவன் ஆட்சிக்கு மாறான கருத்துக் களை சொல்லுகின்றனர்.20 சத வீதம் ஆதரவு 80 சதவீதம் எதிர்ப்பு நிலையில் உள்ளனர்.தி முகவை எதிர்க்கும் கட்சிகளில் 50 ஆண்டு கால வரலாறு, கொள்கை கொண்ட மக்கள் நம் பிக்கை கொண்ட தலைவராக எடப்பாடி பழனிசாமி உள் ளார்.80 சதவீத திமுக எதிர்ப்பு பிரிந்து நிற்பதால் சிதைந்துவி டக்கூடாது. எனவே அனுபவத் தின் அடிப்படையில் மக்க ளுக்கு விடியல்கிடைக்க வேண் டும் என்ற மக்கள் விரும்பும் நோக்கத்தின் அடிப்படையில் தான் எடப்பாடி பழனிசாமி அழைப்பு விடுக்கிறார். எதிர்ப் பவர்கள் ஒன்று சேர்ந்தால் தான் நோக்கம் நிறைவேறும்.நாங்கள் புலி வேட்டைக்கு செல்கி றோம் இடையில் எலி அணில் இடையில் பாம்பு ஓடும் செல் லும் அதையெல்லாம் பார்க்க வேண்டியது இல்லை.

ஓபிஎஸ் இணைப்பு குறித்த கேள்விக்கு, ஓ.பி.எஸ் இணைப்பு காலம் கடந்துவிட் டது. பல கட்சிகள் இணைய தடையாக இருக்கும் அதிமுக வோடு இருக்கும் பாஜக தடை யாக உள்ளதா குறித்த கேள் விக்கு, நல்ல நோக்கத்திற்காக எந்த தியாகத்தையும் செய்ய லாம்.கூட்டணிக்கு யாரெல் லாம் வருகிறார்கள் என்ற கேள் விக்கு, பொறுத்திருந்து பாருங் கள். கூட்டிக் கழித்து பாருங்கள் கணக்கு சரியாக வரும் என பதில் அளித்தார். எடப்பாடி பழனிசாமி வைத்த குறி தப் பாது. வேட்டையன் குறி வைத் தால் வெல்வார் என்பது போல எடப்பாடி பழனிசாமி குறி வைத்தால் வெல்வார். நீதி மன்ற வழக்குகள், தேர்தல் ஆணைய விசாரணை அதிமு வுக்கு தடையாக இருக்குமா என்ற கேள்விக்கு, ஆடி முடிந்து ஆவணி பிறந்தால் எல்லாம் சரி யாகும். அதிமுகவிற்கு நல்லதே நடக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

## காணவில்லை

கடந்த 03.05.2025ந் தேதி சிவக ங்கை பேருந்து நிலையம் அருகே வரும்போது கையில் இருந்து அசல் ஆவண எண்.4177/2018 சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்தில் பதிவுசெய்ய ப்பட்ட அசல் ஆவணம் தொலைந்து விட்டது. மேற்படி அசல் ஆவணத் தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.
தங்கவேல்
26/27, இராஜேந்திர பிரசாத் தெரு
சிவகங்கை.
செல் எண்:9790621748

## அறிவிப்பு

பரமக்குடி நகராட்சியிலிருந்து 08.10.2024-ம் தேதி பதிவுத் தபால் மூலமாக வரப்பெற்ற த.அகிலேஷ் ஒட்டன்சத்திரம் நக ராட்சி இளநிலை உதவியாளரின் பணி பதிவேடு பதிவுத்தபால் பதிவேட்டில் என்னால் பதிவு செய்த பின்பு காணாமல் போனது. இது குறித்து ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் 10.07.2025-ம் தேதியில் புகார் கொடுக்கப்பட்டது. புகார் மனு எண்.582/2025 ஆகும். யாரேனும் மேற்படி பணி பதிவேட்டை கண்டெடுத்தால் எனக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொ ள்கிறேன்.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
பெ.இளஞ்சியம்
அலுவலக உதவியாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி. செல் : 9865858687

# பரமக்குடி நகராட்சியில்
# ரூ.417 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஆய்வு



பரமக்குடி, ஜூலை 25-

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நக ராட்சி நிர்வாகத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணி களை மாவட்ட கலெக்டர் சிம் ரன்ஜீத் சிங் காலோன் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட கலெக்டர் பரமக்குடி நகராட்சி நிர்வாகம் மூலம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற சுகாதார மைய கட் டத்தை பார்வையிட்டதுடன், அதன் உட்கட்டமைப்பு வசதி களின் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் அறிவுறுத்தி னார். கேட்டறிந்ததுடன் பணி யினை விரைந்து முடித்திட வும்,பின்னர் பொதுப்பணித்து றையின் மூலம் ரூ.138 இலட் சம் மதிப்பீட்டில் வணிகவரித் துறைக்கான அலுவலக கட்ட டத்தின் கட்டுமான பணி யினை பார்வையிட்டதுடன், பணிகள் நடைபெறும் பொழுது பொறியாளர்கள் ஆய்வு செய்து திட்டமிட்ட காலத்திற்குள் பணிகளை முடித்திடும் வகையில் பணி மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைத் தினார்.

அதனை தொடர்ந்து ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நென்மேனி ஊராட்சியில் மரைக்காயர்பட்டினம் மற்றும் உரப்புளி செல்லும் வழியில் ரூ.204 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலத்தை பார்வையிட்டு பணியினை உரிய காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் அறிவுறுத் தினார். இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, பொதுப் பணித்துறை உதவி செயற்பொ றியாளர் வைத்தியலிங்கம்,பர மக்குடி நகராட்சி ஆணையர் ராஜமாணிக்கம், பொதுப்பணித் துறை உதவி பொறியாளர் ஐஸ் வர்யா, பரமக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பு கண் ணன் மற்றும் அரசு அலுவலர் கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பரிசுப்பொருள் மற்றும் ஸ்டேசனரி துறையில்
# இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த வணிக தளத்தை உருவாக்கும் மெஸ்லி பிராங்பேர்ட்

சென்னை, ஜூலை 25-

Gifts World Expo - Delhi 2025ல் பிரமாண்டமான திறப்பு விழாவின் போது வெளியிடப்பட்ட ஒரு முக் கிய அறிவிப்பில், Paperworld India, Corporate Gifts Show மற் றும் Gifts World Expo ஆகியவற் றின் ஏற்பாட்டாளர்கள் தங் கள் கண்காட்சி இலாகாக் களை இணைப்பதாக அறி வித்துள்ளனர். டெல்லி, மும் பை, பெங்களூரு மற்றும் கொல்கத்தா முழுவதும் அர்ப் பணிப்புடன் கூடிய கண்காட் சிகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், இந்த கூட்டு முயற்சி பரிசுப்பொருள் மற் றும் ஸ்டேசனரி துறையை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல நீண்டகால உத்திக்கு அடித்தளம் அமைத் துள்ளது.

மெஸ்ஸே பிராங்பேர்ட் ஆசியா ஹோல்டிங் லிமி டெட்டின் நிர்வாக இயக்குந ரும் வாரிய உறுப்பினருமான திரு. ராஜ் மானெக் கருத்துத் தெரிவிக்கையில், "MEX கண் காட்சிகளுடனான எங்கள் தொடர்ச்சியான கூட்டணி, தேசிய அளவில் பொருத்த மான மற்றும் துறை ரீதியாக வலுவான போர்ட்ஃபோலி யோவை உருவாக்க எங்கள் பலங்களையும் தொழில் துறை நுண்ணறிவுகளையும் ஒருங்கிணைப்பதை நோக்க மாகக் கொண்டுள்ளது. கிஃப்ட்ஸ் வேர்ல்ட் எக்ஸ்போ மும்பையில் விரி வடைந்தல் மற்றும் புது தில் லியில் பேப்பர்வேர்ல்ட் இந் தியா தொடங்கப்பட்டதன் மூலம், ஒற்றை வணிக தளத் தின் மூலம் மேம்பட்ட சலு கைகளுடன் வலுவான பிராண்டுடன் B2B பரிசுப்பொ ருள் மற்றும் எழுதுபொருள் பிரிவுகள் இரண்டையும் மிக வும் திறம்பட செய்ய நாங்கள் தயாராக உள்ளோம். இந்த நான்கு முக்கிய வணிக மற் றும் நுகர்வு மையங்களில் கவனம் செலுத்தும் ஒரு பான்-இந்தியா உத்தியை ஏற் றுக்கொள்வது, இந்திய மற் றும் உலகளாவிய பிராண்டுக ளுக்கு ஆண்டு முழுவதும் வலுவான சந்தை வாய்ப்பு களை அனுகுவது மற்றும் நிலையான வணிக ஈடுபாட் டிற்கு இந்த கண்காட்சிகள் மேலும் உதவும்''என்றார்.

# கவனமீர்க்கும் ஃபோன் பே கிரெடிட் கார்டு!

கோவை, ஜூலை 25-

இந்தியாவின் மிகப்பெ ரிய ப்யூர்-ப்ளே கிரெடிட் கார்டு வழங்குனரான SBI கார் டு,நிறுவனம் ஃபோன் பே நிறுவனத்துடன் இணைந்து இன்று PhonePe SBI கார்டு அறி முகப்படுத்தபடுவதை அறி வித்தது இந்தியா முழுவதிலு முள்ள வாடிக்கையாளர்க ளின் மேம்பட்டுவரும் நிதித் தேவைகளைநிறைவு செய்வ தற்காக வடிவமைக்கப்பட்ட இந்த புதிய இணை-பிராண்ட் கிரெடிட் கார்டு, அன்றாட செலவுகளில்அவர்களுக்கு பலனளிக்கும் அனுபவத்தை வழங்குவதை தனது நோக்க மாகக் கொண்டுள்ளது. இந்த புதிய கிரெடிட் கார்டு வாடிக் கையாளர்களின் பல்வேறு விருப்பத்தேர்வுகள் மற்றும் நவீன வாழ்க்கை முறை செல வுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில்ஃபோன் பே SBI கார்டு பர்பிள்(PhonePe SBI CardPurple)மற்றும் ஃ போன் பே SBI கார்டு (PhonePe SBI CardSELECT BLACK)என இரண்டு வேரியண்ட்டுக்க ளில் வருகிறது. கூடுதலாக, இந்த காண்டாக்ட்லெஸ் கிரெடிட் கார்டின் இரண்டு வேரியண்ட்டுக்களும் நுகர் வொர்களின் தேவைக்கு இணங்க மிகவும் பொருத்த மான நெட்வொர்க்கைத் தேர் வுசெய்ய உதவும் வகையில் RuPayமற்றும் VISA தொகை செலுத்தல் நெட்வொர்க்குக ளிலும் கிடைக்கின்றன, மேலும் .RuPayகார்டுகளை UPI உடன் இணைக்க முடி யும் என்பதால் நாடு முழுவ துமுள்ள மில்லியன் கணக்கா னUPI வணிகர்களுடனான பரிவர்த்தனைகளில் பயன்ப டுத்தலாம்.VISA வேரியண்ட் டைமாற்று அடையாளப்ப டுத்திPhonePeஇல்டோக்க னைஸ் செய்யும் வசதி இருப் பதால் பல ஆன்லைன் வணி கர்களிடையே பாதுகாப்பா கப் பயன்படுத்தலாம்.

PhonePe இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சமீர் நிகம்கூறினார், "நிதிசார்ந்த சேவைகளை எளி மைப்படுத்துவது மற்றும் , அனைத்து இந்தியர்களும் அவற்றை எளிதாக அணுகக் கூடியதாக மாற்றுவதற்கான முயற்சியில் நாங்கள் எப்போ தும் உறுதிப்பாட்டோடு செயல்பட்டுவருகிறோம். SBI கார்டு உடனான எங்கள் கூட் டாண்மை மூலம், முறை யான கடன் வசதிப் பிரிவில் டிஜிட்டல்தொகை செலுத்தல் பரிவர்த்தனைகளுக்கு அப் பால் எங்கள் சேவைகளை கொண்டு சென்று மென் மேலும் விரிவுபடுத்துகி றோம்.

# லுலு ஃபோரெக்ஸ் & ஃபின்செர்வ் அர்ஜென்டினா கால்பந்து சங்கத்துடன் கூட்டணி ஏற்படுத்தியது

நாகர்கோவில், ஜூலை 25-

இந்தியாவின் முன்னணி வெளிநாட்டு பரிவர்த்தனை நிறு வனமான லுலு ஃபோரெக்ஸ் மற்றும் மைக்ரோ நிதிச் சேவை யில் முன்னேறி வரும் லுலு ஃபின்செர்வ், தற்போது அர்ஜென் டினா கால்பந்து சங்கத்துடன் (ஏஎப்ஏ) முக்கியமான மண்டல நிதிச் சேவை கூட்டாளராக (பிராந்திய ஃபின்டெக் பார்ட்னர்) இணைந்துள்ளன.இந்த ஒப்பந்தம், லுலு ஃபைனான்ஷியல் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் 10 நாடுகளிலும் ஏஎப்ஏ ஒத்து ழைப்பை விரிவாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், லுலு ஃபோரெக்ஸ் மற்றும் லுலு ஃபின்செர்வ் ஏஎப்ஏ-வின் அதிகாரப்பூர்வ கூட்டாளர்களாக செயற்படவுள் ளன.இந்த ஒப்பந்தம் 2026 எப்ஐஎப்ஏ உலகக்கோப்பை வரை செல்லும்; இது துபாயில் நடைபெற்ற விழாவில் அறிவிக்கப் பட்டது.

இவ்விழாவில், அர்ஜென்டினா அணியின் பயிற்சியாளர் லயனல் ஸ்கலோனி, லுலு குழும நிர்வாகிகள் மற்றும் ஏஎப்ஏ அதிகாரிகள் கலந்துகொண்டனர்.அடுத்த 12 மாதங்களில், வாடிக்கையாளர்களுக்கான பிரச்சாரங்கள், பரிசுகள், டிக்கெட் டுகள் மற்றும் வீரர் சந்திப்பு போன்ற அனுபவங்கள் அமை கின்றன.அர்ஜென்டினா ஒரு அணியாக மட்டுமல்ல, உணர்வு களின் அடையாளமாக இருக்கிறது என்று லுலு குழும எம்டி அதீப் அகமது கூறினார். ஏஎப்ஏ தலைவர் கிளாடியோ டாப் பியா இதை ஒரு இந்திய மக்களுடன் உள்ள உறவை மேலும் வலுப்படுத்தும் ஒப்பந்தமாக வர்ணித்தார்.ஏஎப்ஏ வணிக இயக்குநர் லீயாண்ட்ரோ பீட்டர்சன், இந்திய சந்தையில் உள்ள ஆதரவை நினைவுகூறி, லுலுவின் தேர்வை பாராட்டினார். இந்த ஒப்பந்தம், உலகளாவிய வாடிக்கையாளர்களுடன் உணர்வுப்பூர்வமாக இணைவதற்கான லுலு குழுமத்தின் நீண் டகால நோக்கத்தை உறுதி செய்கிறது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

வருவாய் கோட்டாச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்
ந. க.எண்:601/2025
இ.க.எண்:27/2025ஆ6
அலமேலு மங்கத்தாய்,
க/பெ பாலசேகர்,
கதவுஎண்: 1/3 கிழக்குதெரு,
செல்லமந்தாடி (Po),
சீலப்பாடி கிராமம் .
திண்டுக்கல்.
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்
மேற்படி நிர் மனுதாரர் மகள் பா. ஈஸ்வரி என்பவர் 16-07-2014 தேதி ஷ முகவரியில் இறந்து விட்டதை தின்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட் கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம் தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளபபடும் என்பதை அறியவும்
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

கூடுதல் சார்பு நீதிமன்றம்,
திண்டுக்கல்
O.S.No. 924/2023
பாரத ஸ்டேட் வங்கி
வத்தலக்குண்டு கிளை அதன்
கிளை மேலாளர் மூலம்
...மனுதாரர்
/எதிர்/
திரு.V.செல்வராஜ்,
த/பெ,ந.வெள்ளையன்,
எண். 18/1611, செல்லப்பன்
இல்லம், பரிசுத்த மகாராஜா தெரு,
காந்திநகர், வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம்.
........ பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி நம்பரில் வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய பரிகாரம் கோரி தாக்கல் செய்த தாவா வழக்கு வருகின்ற 08.08.2025ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் உமக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தாவன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் உம்மீது ஒருதலைபட்சமாகத் தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
L.பாரதி, M.L.,
A.யாசர் அராபத், M.A., B.L.,
அட்வகேட்ஸ், திண்டுக்கல்.

வேடசந்தூர் சப் கோர்ட்டு
I.A.No.6/2025
O.S.No. 157/2013
முகமதுயாக்கூப் (இறப்பு) அப்துல்கரீம்
வகையறா
.... மனுதாரர்கள்/வாதிகள்
Vs
அப்துல்மஜித் (இறப்பு) ஜொகராபீவி
வகையறா
.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
1. பரிதாபேகம்,
க/பெ. லேட்.முகமதுமீரான்
மேற்கு தெரு, சித்துவார்பட்டி கிராமம்,
வேடசந்தார் தாலுகா.
2. சலீம், த/பெ.லேட்.முகமதுமீரான்,
மேற்படி முகவரி
.... இறந்து போன 13ம் பிரதிவாதியின்
வாரிசுகள்/புரபோஸ்ட் 18,19
பிரதிவாதிகள்
அறிவிப்பு
வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் கண்ட 13ம் பிரதிவாதி முகமது மீரான் கடந்த 15.08.2021ம் தேதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகளான உங்களை தாவா அசல் வழக்கிலும், I.A.No. 386/2013 ஆணையர் மனுவிலும் 18,19 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளாக சேர்க்க மனுச் செய்து வாய்தா வரும் 02.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவிக்கவும், இல்லை எனில் உங்களை பொறுத்து அசல் வழக்கிலும், மனுவிலும் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
S. NAGARAJ B.Com.B.L.
ADVOCATE, VEDASANDUR.

வேடசந்தூர் சப் கோர்ட்டு
I.A.No.4/2025
O.S.No. 157/2013
முகமதுயாக்கூப் (இறப்பு) அப்துல்கரீம்
வகையறா
... மனுதாரர்கள்/வாதிகள்
Vs
அப்துல்மஜித் (இறப்பு) ஜொகராபீவி
வகையறா
... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
1. பரிதாபேகம்,
க/பெ. லேட்.முகமதுமீரான்
மேற்கு தெரு, சித்துவார்பட்டி கிராமம்,
வேடசந்தார் தாலுகா.
2. சலீம், த/பெ. லேட்.முகமதுமீரான்,
மேற்படி முகவரி
..... இறந்து போன 13ம் பிரதிவாதியின்
வாரிசுகள்/புரபோஸ்ட் 18,19
பிரதிவாதிகள்
அறிவிப்பு
வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் கண்ட 13ம் பிரதிவாதி முகமது மீரான் கடந்த 15.08.2021ம் தேதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகளான உங்களை தாவா அசல் வழக்கிலும், 1.A.No. 386/2013 ஆணையர் மனுவிலும் 18,19 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளாக சேர்க்க மனுச் செய்து வாய்தா வரும் 02.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவிக்கவும், இல்லை எனில் உங்களை பொறுத்து அசல் வழக்கிலும், மனுவிலும் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
S.NAGARAJ B.Com.B.L.,
ADVOCATE, VEDASANDUR.

வேடசந்தூர் சப் கோர்ட்டு
I.A.No.7/2025
I.ANO: 386/2013
O.S.No. 157/ 2013
முகமதுயாக்கூப் (இறப்பு) அப்துல்கரீம்
வகையறா
.... மனுதாரர்கள்/வாதிகள்
Vs
அப்துல்மஜித் (இறப்பு) ஜொகராபீவி
வகையறா
...எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்
1. பரிதாபேகம்,
க/பெ. லேட்.முகமதுமீரான்
மேற்கு தெரு, சித்துவார்பட்டி கிராமம்,
வேடசந்தார் தாலுகா.
2. சலீம், த/பெ.லேட்.முகமதுமீரான்,
மேற்படி முகவரி
..... இறந்து போன 13ம் பிரதிவாதியின்
வாரிசுகள்/புரபோஸ்ட் 18,19
பிரதிவாதிகள்
அறிவிப்பு
வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் கண்ட 13ம் பிரதிவாதி முகமது மீரான் கடந்த 15.08.2021ம் தேதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகளான உங்களை தாவா அசல் வழக்கிலும், I.A.No. 386/2013 ஆணையர் மனுவிலும் 18,19 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளாக சேர்க்க மனுச் செய்து வாய்தா வரும் 02.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவிக்கவும், இல்லை எனில் உங்களை பொறுத்து அசல் வழக்கிலும், மனுவிலும் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
S. NAGARAJ B.Com., B.L.,
ADVOCATE, VEDASANDUR.

சிவகங்கை டி.மு.கோர்ட்டு
I.A.No.1075/2018 in
O.S No.29/2016
சேகர் மற்றும் சிலர்
......... மனுதார்கள்/வாதிகள்
எதிர்
முத்துராக்கு, த/பெ.கர்ணன்
மஜீத்ரோடு,குளக்கால் தெரு
சிவகங்கை டவுன்
சிவகங்கை மாவட்டம்.
......... 14ம் எதிர்மனுதார்
அறிவிப்பு
சிவகங்கை உரிமையியல் நீதிம ன்றத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட விளம்புகை வழக் கில் 1ம் பிரதிவாதி கர்ணன் இற ந்து விட்டபடியாள் அவருக்கு வாரிசு சேர்க்க மனு செய்து அதில் 14ம் பிரதிவாதியாகிய தாங்கள் ஆஜராதவற்கு 08.08.2025ம் தேதி வாய்தா ஏற்ப ட்டுள்ளது. எனவே தாங்கள் அன் றையதினம் சமூகம் நீதிமன்றத் தில் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக் கறிஞர் மூலமோ ஆஜராகி தெரி வித்துக்கொள்ளலாம் என்றும் தவ றும் பட்சத்தில் தங்களுக்கெதி ராக ஒருதலைபட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகி றது.
அ.மதன்மோகன் பி.ஏ.பி.எல்
அட்வகேட் /சிவகங்கை.

மாண்புமிகு சிறப்பு மாவட்ட
நீதிமன்றம், மதுரை.
(FOR M.C.O.P.CASES)
M.C.O.P.No: 1183 / 2024
பாண்டி, S/o.பாண்டி,
க.எண்.11/190, ஆட்டுக்குளம்
அஞ்சல், மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம்.
--- மனுதாரர்
--- எதிர் ---
கார்த்திகேயன், S/o.புஷ்பவனம்,
க.எண்.25, 3-வது தெரு, சுல்தான்
நகர் 5-வது குறுக்கு தெரு,
மதுரை-625002.
---1-ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் ஆஜராக 11.08.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. தங் களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி வாய்தா தேதி யன்று காலை 10.00மணிக்கு மேற் படி நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக் கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சே பணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
P.அரிஹரன்,
வழக்கறிஞர், மதுரை.

வேடசந்தூர் சப் கோர்ட்டு
I.A.No.5/2025
O.S.No. 157/2013
முகமதுயாக்கூப் (இறப்பு) அப்துல்கரீம்
வகையறா
.... மனுதாரர்கள்/வாதிகள்
Vs
அப்துல்மஜித் (இறப்பு) ஜொகராபீவி
வகையறா
.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
1. பரிதாபேகம்,
க/பெ. லேட்.முகமதுமீரான்
மேற்கு தெரு, சித்துவார்பட்டி கிராமம்,
வேடசந்தார் தாலுகா.
2. சலீம், த/பெ. லேட்.முகமதுமீரான்,
மேற்படி முகவரி
.... இறந்து போன 13ம் பிரதிவாதியின்
வாரிசுகள்/புரபோஸ்ட் 18,19
பிரதிவாதிகள்
அறிவிப்பு
வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் கண்ட 13ம் பிரதிவாதி முகமது மீரான் கடந்த 15.08.2021ம் தேதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகளான உங்களை தாவா அசல் வழக்கிலும், I.A.No. 386/2013 ஆணையர் மனுவிலும் 18,19 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளாக சேர்க்க மனுச் செய்து வாய்தா வரும் 02.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவிக்கவும், இல்லை எனில் உங்களை பொறுத்து அசல் வழக்கிலும், மனுவிலும் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
S. NAGARAJ B.Com.B.L.
ADVOCATE, VEDASANDUR.

## காணவில்லை

கடந்த 30.06.2025ந் தேதி காளை யார்கோவில் மெயின் ரோட்டின் அரு கே ஜெராக்ஸ் எடுக்க வரும்போது கையில் இருந்து அசல் ஆவண எண்கள்.898/2005, 899/2005, 5536/2018 காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதி வுசெய்யப்பட்ட அசல் ஆவணம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடு த்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்ப டைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
த.சக்தி, த/பெ.தனிஸ்லாஸ்
8486/ARS, நகர்
சிவூரணி, காளையார்கோவில்
தாலுகா, சிவகங்கை மாவட்டம்
செல் எண்:9500304908

## ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter I,DHARSANA.V, D/O VENKATESAN .V.,AGED 22 YEARS,D.O.B 09/07/2003 and Permanently residing at,No. W1/282/22/1, Ngo colony, Unjampatty post, Theni, Tamilnadu -625531 .intend having my enrollment an Advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry,Bar council Building, High Court Campus, Chennai-104. Those who have any Valid Objections may,notify the same to the Bar Council within 10 days
DHARSANA. V

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
பேரூராட்சிகள் நிர்வாகம்
மதுரை மாவட்டம் எழுமலை பேரூராட்சி
தேசிய சுகாதார மானிய திட்டம் 2025–2026

ந.க.எண்.85/2024 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 23.07.2025

1. முழுமையான விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. மதுரை மாவட்டம், எழுமலை பேரூராட்சி செயல் அலுவலரால் 1 ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணி (ஒன்று) ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 23.07.2025 முதல் 12.08.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக்கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 12.08.2025 மாலை 3.00 மணி
ஆ) இணையதளம் வாயிலாக மட்டுமே பெறப்படும் மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.08.2025 மாலை 4.00 மணி

செயல் அலுவலர்
எழுமலை பேரூராட்சி மதுரை மாவட்டம்.
செமதொஇ/3812/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி பேரூராட்சி

ந.க.எண். 91 / 2025/அ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.23.07.2025

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி முதல்நிலை பேரூராட்சியில் 15வது நிதி ஆணைய சுகாதார மானியம் - 2025-26 இன் கீழ், ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்வார்திருநகரி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் அமைத்தல் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

| | |
|---|---|
| அ) முன் கலந்தாய்வு கூட்டம் | 31.07.2025 முற்பகல் 11.00 மணி |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 18.08.2025 மாலை 3.00 மணி வரை |
| இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 18.08.2025 மாலை 3.30 மணி |

3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4) நிர்வாக காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டாலோ, காலநீட்டிப்பு செய்யப்பட்டாலோ, அதன் விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in -ல் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்
பேரூராட்சி மன்றம்
ஆழ்வார்திருநகரி
தூத்துக்குடி மாவட்டம்

செ.ம.தொ.இ./3779/ ஒப்பந்தப்புள்ளி / 2025

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
ஆழ்வார்திருநகரி,
தூத்துக்குடி மாவட்டம்

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - புதுக்கோட்டை
மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம்

ந.க.எண்: அ2/1244/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 23.07.2025

15வது நிதிக்குழு சுகாதார மான்யம் 2025–26 ஆம் ஆண்டு

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மணமேல்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) -ஆல் 15வது நிதிக்குழு சுகாதார மான்யம் 2025-2026 ஆம் ஆண்டு பின்வரும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | ஊராட்சியின் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மணமேல்குடி | நெற்குப்பை | நெற்குப்பையில் புதிய ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டுதல் | 150.00 |

3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 28.07.2025 முதல் 12.08.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்:
அ. மின் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 12.08.2025 பி.ப 03.00 மணி வரை.
ஆ. மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 12.08.2025 பி.ப 04.00 மணிக்கு.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம், மணமேல்குடி
செ.ம.தொ.இ/3821/ஒப்பந்தப்புள்ளி/2025

# காயத்தால் இங்கிலாந்து டெஸ்ட் தொடரிலிருந்து ரிஷப் விலகல்

## இந்திய அணிக்கு பின்னடைவு



**மான்செஸ்டர், ஜூலை 25-**

மான்செஸ்டர் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் பாதத்தில் அடி வாங்கிய ரிஷப் பந்த் எலும்பு முறிவு காரணமாக இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். இந்திய அணிக்கு இது ஒரு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**எலும்பு முறிவு...**

கடந்த டெஸ்ட்டில் கையில் அடிபட்டு ஆட முடியாமல் ரிஷப் பந்த் தவித்தார். இந்த டெஸ்ட் போட்டியில் கிறிஸ் வோக்ஸ் வீசிய ஃபுல் பந்தை ரிவர்ஸ் ஷாட் ஆடும் முனைப்புடன் வலது பாதத்தில் சரியான அடி வாங்கி ரத்தம் கொட்டியதோடு கால் உடனேயே பெரிய வீக்கம் கண்டது. இந்நிலையில், ஸ்கேன் எடுத்தபோது எலும்பு முறிவு ஏற்பட்டது தெரியவர, இந்தத் தொடரில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கேப்டன்கள் கோபம்...**

இங்கு தான் தோனி போன்ற கேப்டன்கள் கடும் கோபத்துக்கு ஆளாவார்கள். ஏனெனில், காயமடைந்தால் நிச்சயம் பதிலி வீரர் அவரை அத்தனை விதத்திலும் இடமாற்றம் செய்ய முடியாது என்பதுதான் கிரிக்கெட்டின் வரலாற்று உண்மை. ரிஷப் பந்த் உண்மையில் நன்றாக ஆடிவந்தார். பொறுமையுடன் பொறுப்பாக ஆடினார். திடீரென அவர் மனதுக்குள் பூதம் புகுந்து விடுகிறது ஒன்று ரேம்ப் ஷாட் ஆடுகிறேன் என்று கீழே விழுகிறார், இல்லையெனில் ஸ்லாக் ஸ்வீப் ஆடுகிறேன் என்று ஆடுகிறார். ரிவர்ஸ் ஷாட் ஆடி ஏற்கெனவே ஜோப்ரா ஆர்ச்சர் பந்தில் பீட் டன் ஆகியிருந்தார்.

**பொறுப்புணர்வு...**

அங்குதான் ஈகோவை விட வேண்டும். இன்றைக்கு மாட்டவில்லை என்றால், அந்த ஷாட்டுடன் மோதிக் கொண்டிருக்கக் கூடாது, எப்படியும் ஆடியே தீருவேன், அந்த ஷாட்டை கனெக்ட் செய்தே தீருவேன் என்று ஒருவித ஈகோ வந்து விட்டது ரிஷப் பந்த்துக்கு, அதற்குக் கொடுத்தவிலை 2 டெஸ்ட் போட்டிகளில் ஆட முடியாத நிலை. ஏற்கெனவே ஏகப்பட்ட காயங்களினால் தவித்து வரும் இந்திய அணிக்கு நாமும் சுமையாக மாறக் கூடாது என்ற பொறுப்புணர்வு எந்த ஒரு வீரருக்கும் வேண்டும்.

**ஈகோ பிரச்சினை...**

அந்தப் பந்தை அப்படி ஆட வேண்டிய அவசியம், அந்தத் தருணத்தில் அது தேவைப்படாத ஒரு ஷாட், ஒன்றுமில்லாத ஒரு நேர் புல் டாஸில் மட்டையில் பட்டுப் பாதத்தைத் தாக்கியது. நேர்மறையான ஒரு ஷாட்டை ஆடியிருந்தால் அது பவுண்டரிக்குக் கூட சென்றிருக்கலாம். இதுதான் பிரச்சினை, அந்த ஷாட்டை ஆடியே தீருவேன், கனெக்ட் செய்தே ஆக வேண்டும் என்று முன் கூட்டியே டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடுவது இப்படிப் பட்ட முடிவில் தான் கொண்டு விடும்.

**இஷான் கிஷன்...**

இதனால் அவரது சொந்த கரியரும் பாதிக்கப்படுவதோடு, இந்திய அணியையும் கைவிட்டு விட்டார் ரிஷப் பந்த். சிந்திக்காமல் செய்த தவற்றினால் அவர் இப்போது 7-8 வாரங்களுக்கு கிரிக்கெட் ஆட முடியாது. இத்தனைக்கும் இந்திய அணியின் வைஸ் கேப்டன் ரிஷப் பந்த். அவருக்கு இன்னும் கூடுதல் பொறுப்புணர்வு தேவை என்பதே இந்தக் காயம் காட்டும் உண்மை. இப்போது, ஒருவேளை இஷான் கிஷன் மாற்று வீரராக தேர்வு செய்யப்படலாம் என்று தெரிகிறது.

**பி.சி.சி.ஐ. அறிக்கை...**

முன்னதாக. ரிஷப் பண்டின் காயம் குறித்து இந்திய கிரிக்கெட் வாரியம் (பி.சி.சி.ஐ.) வெளியிட்டிருந்த அறிவிப்பில், ரிஷப் பண்ட், போட்டியின் மீதமுள்ள நாட்களில் விக்கெட் கீப்பிங் பணிகளைச் செய்ய மாட்டார். துருவ் ஜூரெல் விக்கெட் கீப்பராகப் பொறுப் பேற்பார். காயம் இருந்தபோதிலும், ரிஷப் பண்ட் அணியுடன் இணைந்துள்ளார். மேலும் தேவைப்பட்டால் அவர் பேட்டிங் செய்வார்'' என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 4-வது டெஸ்ட் போட்டி: முதல் இன்னிங்சில் இந்தியா 358 ரன்கள்

**மான்செஸ்டர், ஜூலை 25-**

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது.

**ஜெய்ஸ்வால் 58...**

இங்கிலாந்து- இந்தியா இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டர் ஓல்டு டிராஃபோர்டில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் தொடங்கிய போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி இந்தியா முதல் இன்னிங்சை தொடங்கியது. ஜெய்ஸ்வால்- கே.எல். ராகுல் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 94 ரன்கள் எடுத்தது. கே.எல். ராகுல் 46 ரன்கள் எடுத்த நிலையிலும் ஜெய்ஸ்வால் 58 ரன்னில் ஆட்டமிழந்தார்.

**சாய் சுதர்சன் அசத்தல்...**

அடுத்து வந்த சுப்மன் கில் 12, சாய் சுதர்சன் 61 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 83 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 264 ரன்கள் எடுத்துள்ளது. ஜடேஜாவும், ஷர்துல் தாக்கூரும் தலா 19 ரன்களுடன் களத்தில் இருந்தனர்.

**ரிஷப் பண்ட் அதிரடி...**

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியது. ஜடேஜா 20 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து ஷர்துல் தாகூர் - வாஷிங்டன் சுந்தர் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடினர். தாகூர் 41 ரன்னில் ஆட்டமிழந்தார். முதல் நாளில் காலில் அடிப்பட்ட வெளியேறிய ரிஷப் பண்ட் மீண்டும் களமிறங்கினார். அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தார். நிதானமாக விளையாடி கொண்டிருந்த வாஷிங்டன் சுந்தர் 27 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த காமோஜ் டக் அவுட் ஆனார். அதனை தொடர்ந்து அரை சதம் விளாசிய பண்ட் 54 ரன்னில் ஆட்டமிழந்தார். கடைசி விக்கெட்டாக பும்ரா 4 ரன்னில் வெளியேறினார்.

**358 ரன் குவிப்பு...**

இதனால் இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. இங்கிலாந்து தரப்பில் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளையும் ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

# இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள், டி-20 தொடர் அட்டவணை வெளியீடு

## மீண்டும் அணியில் விராட், ரோகித் சர்மா

**மும்பை, ஜூலை 25-**

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள், டி20 தொடர் அட்டவணையை பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ளது.

**இங்கிலாந்து சுற்றுப்பயணம்...**

இந்திய அணி அடுத்த ஆண்டு ஜூலை மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் டி20 தொடரில் விளையாட உள்ளது. அதன்படி முதலில் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெறுகிறது. டி20 தொடர் ஜுலை 1-ந் தேதி தொடங்கி ஜூலை 11-ந் தேதி வரை நடைபெறுகிறது.

ரோகித், விராட் கோலி...

அதனை தொடர்ந்து ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இந்த தொடர் ஜூலை 14-ந் தேதி தொடங்கி ஜூலை 19-ந் தேதி வரை நடக்கிறது. இந்திய வீரர்கள் ரோகித், விராட் கோலி இந்த ஒரு நாள் தொடரில் விளையாட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



**டி20 தொடர்:-**

1. ஜூலை 1-ம் தேதி பேங்க்ஸ் ஹோம்ஸ் ரிவர்சைடு, டர்ஹாம் மாலை 6:30 மணி
2. ஜூலை 4-ம் தேதி எமிரேட்ஸ் ஓல்ட் டிராஃபோர்ட், மான்செஸ்டர் பிற்பகல் 2:30 மணி
3. ஜூலை 7-ம் தேதி ட்ரென்ட் பிரிட்ஜ், நாட்டிங்ஹாம் மாலை 6:30 மணி
4. ஜூலை 9-ம் தேதி சீட் யுனிக் ஸ்டேடியம், பிரிஸ்டல் மாலை 6:30 மணி
5. ஜூலை 11-ம் தேதி யுடிலிடா பவுல், சவுத்தாம்ப்டன் மாலை 6:30 மணி

**ஒருநாள் தொடர்:-**

முதல் ஒருநாள் போட்டி ஜூலை 14 எட்ஜ் பாஸ்டன், பர்மிங்காம் மதியம் 1:00 மணி

இரண்டாவது ஒருநாள் போட்டி ஜூலை 16 சோபியா கார்டன்ஸ், கார்டிஃப் மதியம் 1:00 மணி

மூன்றாவது ஒருநாள் போட்டி ஜூலை 19 லார்ட்ஸ், லண்டன் காலை 11:00 மணி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம்பெற த.வெ.க. தலைவர் விஜய் வாழ்த்து

**சென்னை, ஜூலை 25-**

முதல்வர் ஸ்டாலின் நலம்பெற வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த திங்கள்கிழமை காலை நடைப்பயிற்சியின்போது ஏற்பட்ட லேசான தலை சுற்றல் காரணமாக, அவர் கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு தொடர்ச்சியாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்வர் சில நாள்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியதன்பேரில் அவர் மருத்துவமனையில் இருந்தே அலுவல் பணிகளைக் கவனித்து வருகிறார்.

இதனிடையே, முதல்வரின் உடல்நிலை மற்றும் பரிசோதனைகள் தொடர்பாக அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில், ''முதலமைச்சர் நலமாக உள்ளார். தனது வழக்கமான பணிகளை இரண்டு நாள்களில் மேற்கொள்வார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், முதல்வர் ஸ்டாலின் நலம் பெற வேண்டும் என்று தவெக தலைவர் விஜய் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், ''தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் விரைவில் பரிபூரண உடல்நலம் பெற்றுக் கடமையாற்றிட விழைகிறேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## இங்கிலாந்துக்கு பறக்கும் கிஷன்

இங்கிலாந்து- இந்தியா அணிகள் மோதும் 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 264 ரன் எடுத்து இருந்தது. ரிஷப்பண்ட் 37 ரன்னில் இருக்கும் போது காயத்தால் வெளியேறினார். அவருக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டது.

அதில் ரிஷப் பண்டிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து பண்ட் விலகினார். இதனால் 2-வது இன்னிங்சில் ரிஷப் பண்ட் விளையாடமாட்டார். இது இந்திய அணிக்கு பின்னடைவாகும். ரிஷப் பண்டிற்கு பதிலாக இஷான் கிஷன் இந்திய அணியில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## 64 பந்துகளில் ஆயுஷ் சதம்

இந்திய யு19 கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த நாட்டின் யு19 அணியுடன் கிரிக்கெட் தொடரில் விளையாடியது. 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இந்நிலையில், 2 டெஸ்ட் போட்டிகளும் டிராவில் முடிந்தன. 2-வது டெஸ்ட் போட்டி கடந்த 20-ம் தேதி தொடங்கியது. இதில் இந்திய அணி டாஸ் வென்று பந்து வீச முடிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 309 ரன்களும், இந்தியா 279 ரன்களும் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து 324 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

355 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா இந்தப் போட்டியின் கடைசி நாளில் விரட்டியது. வைபவ் சூர்யவன்ஷி மற்றும் கேப்டன் ஆயுஷ் மாத்ரே இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். முதல் பந்தில் ரன் ஏதும் எடுக்காமல் வைபவ் சூர்யவன்ஷி ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வந்த விஹான் மல்ஹோத்ரா உடன் 100 ரன்கள் மற்றும் அபிக்யான் குந்து உடன் இணைந்து 117 ரன்கள் பாரட்னர்ஷிப் அமைத்தார் ஆயுஷ் மாத்ரே. அவர் 64 பந்துகளில் சதம் கடந்தார். இந்திய அணி 43 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 290 ரன்கள் எடுத்தது. கடைசி நாளின் ஆட்ட நேரம் முடிந்த காரணத்தால் இந்த டெஸ்ட் போட்டி சமனில் முடிந்தது. இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் சதம், 2-வது போட்டியின் முதல் இன்னிங்ஸில் 80 ரன்கள் விளாசி இருந்தார் 18 வயதான ஆயுஷ் மாத்ரே.

## தெ.ஆ. அணியில் ப்ரீவிஸ்

தென்னாப்பிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து 3 டி20, 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவிருக்கிறது. இந்தப் போட்டிகள் வரும் ஆக.10ஆம் தேதி முதல் தொடங்குகின்றன. இதில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. எய்டன் மார்கரம் டி20 அணிக்கும் டெம்பா பவுமா ஒருநாள் அணிக்கும் கேப்டாக செயல்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட்டில் ஜிம்பாம்வே அணிக்கு எதிராக அறிமுகமான சுழல் பந்துவீச்சாளர் ப்ரீனிலான் சுப்ராயன் டி20 அணியில் அறிமுகமாகியுள்ளார்.

சி.எஸ்.கே. அணியில் அசத்திய டெவால்டு ப்ரீவிஸ் ஸும், லுகான் - ட்ரெ பிரிடோரியஸும் ஒருநாள் போட்டிகளில் அறிமுகமாகிறார்கள். டி20 போட்டிகள் ஆக.10, 12,16 ஆம் தேதிகளிலும் ஒருநாள் போட்டிகள் ஆக.19,22,24 ஆம் தேதியும் தொடங்குகின்றன. கடைசி டி20 உலகக் கோப்பையில் இந்தியாவிடம் தென்னாப்பிரிக்கா இறுதிப் போட்டியில் தோற்றது.

## காதலரை அறிவித்த வீனஸ்

அமெரிக்காவைச் சேர்ந்த வீனஸ் வில்லியம்ஸ் (45 வயது) ஒற்றையர் பிரிவில் 7 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். 16 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். டிசி ஓபன் ஒற்றையர் பிரிவில் ரவுண்ட் ஆஃப் 32 சுற்றில் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் சக அமெரிக்க வீராங்கனையை வென்றார். போட்டி முடிந்த பிறகு அவர் பேசியதாவது: கடற்கரையில் ஓய்வெடுக்க வேண்டுமென எனக்குப் பல நேரங்களில் தோன்றியிருக்கிறது. டென்னிஸ் விளையாடுவது எவ்வளவு கஷ்டம் தெரியுமா நண்பர்களே? அதற்காக எவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறது தெரியுமா? வழக்கமான 9 - 5 வேலையை விட கடினமானது.

நாள் முழுவதும் உழைக்க வேண்டியிருக்கும். இந்தமாதிரி நேரங்களில் அவர் எனக்கு உற்சாகம் அளிக்கிறார். அவர் நான் விளையாடியதைப் பார்த்ததே இல்லை என்றார். டென்மார்க்கைச் சேர்ந்த ஆண்ட்ரியா பிரெடி இத்தாலியில் வாழ்ந்து வருகிறார். நடிகராக இருக்கும் இவரை வீனஸ் வில்லியம்ஸ் எப்போது சந்தித்து காதலித்தார் என்ற விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இத்தாலியில் மாடலாக இருக்கும் ஆண்ட்ரியா பிரெடி பல இணையத் தொடர்களில் நடித்துள்ளார்.

## ஓய்வு குறித்து ஆண்டர்சன்

கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெஸ்ட் இண்டீஸ்க்கு எதிராக லார்ட்ஸ் மைதானத்தில் கடைசி போட்டியில் விளையாடினார். இந்த நிலையில் தான் முழு விருப்பத்துடன் ஓய்வு பெறவில்லை என ஆண்டர்சன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆண்டர்சன் கூறுகையில் "நான் கடந்த வருடம் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றேன். ஆனால் முழு விருப்பத்துடன் ஓய்வு பெறவில்லை.

கேப்டன், பயிற்சியாளர் மற்றும் கிரிக்கெட் வாரிய இயக்குனருடன் ஆலோசனையில் ஈடுபட்டேன். அப்போது அவர்கள் வேறு திசையில் செல்ல விரும்புவதாக தெரிவித்தார்கள்'' என்றார். 188 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 704 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தை பிடித்துள்ளார். வேகப்பந்து வீச்சாளர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே பழனிசாமி, தொடர் சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக நேற்று புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டையில்நேற்றுபிரச்சாரத்தின்இடையேகூடியிருந்தஆயிரக்கணக்கானதொண்டர்கள் மத்தியில் டிராக்டரில் பயணம் செய்தார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், இரா.காமராஜ் உள்ளனர்.

# இ.பி.எஸ். சுற்றுப்பயணத்தில் மாற்றம்

**சென்னை, ஜூலை 25-**

அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமியின் தொடர் பிரசார சுற்றுப்பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.க. தலைமை அலுவலகம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை: 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தொடர் சுற்றுப்பயணத்தை கடந்த ஜூலை 7-ஆம் தேதி முதல் சட்டப் பேரவைத் தொகுதி வாரியாக எடப்பாடி கே.பழனிசாமி மேற்கொண்டு வருகிறார். ஆக. 8-ஆம் தேதி வரை அவரது சுற்றுப்பயண விவரம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஜூலை 26-ம் அவர் மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டு, ஜூலை 29-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, ஜூலை 29இல் சிவகங்கை மாவட்டத்துக்குள்பட்ட காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை ஆகிய தொகுதிகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குத்தகை விவசாயிகளுக்கும் பயிர்க்காப்பீடு செய்யலாம்

## தமிழ்நாடு அரசு புதிய அறிவிப்பு

**சென்னை, ஜூலை 25-**

குறுவை சாகுபடியில் நிலம் வைத்துள்ள உரிமையாளர்கள் மட்டுமே பயிர்க் காப்பீடு செய்யலாம் என்ற நிலையை மாற்றி, குத்தகை தாரர்களும் பயிர்க் காப்பீடு செய்ய தமிழக அரசு தற்போது அனுமதி அளித்துள்ளது.

விவசாயிகள் சாகுபடி செய்யும்போது, எதிர்பாராத மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டால், அதில் இருந்து விவசாயிகளை பாதுகாத்துக் கொள்ள பயிர்க் காப்பீடு திட்டம் அமல்படுத்தப் படுகிறது. இந்நிலையில், குறுவை பருவத்தில் சாகுபடி செய்த விவசாயிகள் ஜூலை 31-ம் தேதி வரை பயிர்க் காப்பீடு செய்ய வேளாண்மைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

ஆனால், நிலம் வைத்துள்ள உரிமையாளர்கள் மட்டுமே பயிர்க் காப்பீடு செய்ய முடிகிறது. குத்தகை விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.38 லட்சம் ஏக்கரில் நடவு செய்யப்பட்ட நிலையில், 179 விவசாயிகள் மட்டுமே, 110 ஏக்கருக்கு பயிர்க் காப்பீடு செய்திருந்தனர். இதையடுத்து, தமிழக அரசு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, பழைய படி குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயிர்க் காப்பீடு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்து தமிழக விவசாயிகள் சங்க டெல்டா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி.ஜெகதீசன் கூறியது: டெல்டா மாவட்டங்களில் 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சத்திர நிர்வாகம் மற்றும் கோயில், ஆதீனத்துக்கு சொந்தமான இடங்களில் குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்பு பயிர்க் காப்பீடு செய்ய முடியாத நிலை இருந்தது. தற்போது அரசு அனுமதி வழங்கியுள்ளதால், விவசாயிகள் இனிமேல் வருவாய்த் துறையினரிடம் சான்று பெற்று காப்பீடு செய்ய காலதாமதம் ஆகும். எனவே, காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்றார்.

## தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

# ஆன்லைன் மூலம் மட்டுமே இனி வேட்பு மனு தாக்கல் செய்யலாம்

## தலைமை தேர்தல் கமிஷன் நடவடிக்கை

**புதுடில்லி, ஜூலை 25-**

அரசியல் கட்சியினர், அரசு அதிகாரிகள், பொதுமக்களின் சிரமத்தை தவிர்க்க இனி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆன்லைனில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் கமிஷன் சுவிதா என்ற இணையதளத்தை ஏற்கனவே பயன்பாட்டில் வைத்துள்ளது. இந்த, இணையதளத்தில், வேட்பாளர்கள் தங்களது பெயர், செல்போன் எண் கொடுத்து லாகின் செய்து கொள்ள வேண்டும். பின்னர் தனது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பதிவு செய்தால் நமது முழு விவரங்கள் அனைத்தும் தானாக பூர்த்தி ஆகிவிடும். இதையடுத்து, வேட்பாளர்கள் தாங்கள் போட்டியிடும் தொகுதியை தேர்வு செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும். சொத்து மற்றும் வழக்கு போன்ற அனைத்து விவரங்களையும் தாக்கல் செய்யலாம். தேவையான ஆவணங்களையும் இணைக்கலாம்.

இந்த இணையதளத்தில் வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்யும் போது, தேர்தல் பிரசாரங்களுக்கு அனுமதிகள், பாதுகாப்பு கோரிக்கைகள், வரவு, செலவு கணக்குகளை தாக்கல் செய்யலாம். இது குறித்து மத்திய தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது: வேட்பாளர்கள், அரசியல் கட்சியினர், அரசு அதிகாரிகள், பொதுமக்களின் சிரமத்தை தவிர்க்க அனைத்தையும் முற்றிலும் டிஜிட்டல் முறையில் மாற்றி விட்டது. இனி வேட்பாளர்கள் ஆன்லைன் முறையிலேயே வேட்பு மனு தாக்கல் செய்யலாம். இந்த நடைமுறை வரும் நவம்பர் மாதம் பீகார் தேர்தலில் கொண்டுவரப்படும்.

அதில் ஏற்படும் தாக்கத்தை பொறுத்து அடுத்த ஆண்டு தமிழகம் உட்பட ஐந்து மாநிலங்களில் நடைபெறும் சட்டசபை தேர்தல்களிலும் முழு அளவில் செயல்படுத்தப்படும். இந்த டிஜிட்டல் முறை விண்ணப்பம் வேட்பாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# அன்புமணி சுற்றுப்பயணத்திற்கு தடைவிதிக்க வேண்டும்: ராமதாஸ்

**விழுப்புரம், ஜூலை 25-**

''அன்புமணி தொடங்கும் சுற்றுப்பயணத்தால் வட தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் சூழல் இருப்பதால், போலீசார் தடை விதிக்க வேண்டும்'' என பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், தைலாபுரத்தில் நிருபர்கள் சந்திப்பில் ராமதாஸ் கூறியதாவது: பா.ம.க., தலைமையகம் சென்னையிலிருந்து தைலாபுரத்துக்கு மாற்றப்பட்டு விட்டது. சென்னையிலோ வேறு எங்குமோ பா.ம.க., தலைமையகம் இல்லை. பனையூரில் பா.ம.க., தலைமையகம் இருப்பதாக சொல்வது, தாங்களாகவே நிர்வாகிகளை நியமனம் செய்து கொண்டு செயல்படுவது சட்டவிரோதமானது.

அன்புமணி செயல் தலைவராக செயல்படுவார். கட்சியும் நான் தான், தலைவரும் நான் தான். சிறப்பு பொதுக்குழுவின் படி பா.ம.க.,வின் செயல் தலைவராக அன்புமணி தொடர்வார்.

தன்னை தலைவர் எனக் கூறி கொண்டால் நடவடிக்கை எடுக்கப்படும். அவரின் பெயருக்குப் பின்னால் என் பெயரைப் போடக்கூடாது என ஏற்கெனவே கூறி இருக்கிறேன். ஜூலை 25ம் (நாளை) தேதியில் இருந்து நடைபயணம் போவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கு டி.ஜி.பி., இடம், நடவடிக்கை எடுக்க கோரி, நாங்கள் புகார் மனு கொடுத்து இருக்கிறோம்.

இதனால் வட தமிழகத்தில் சட்ட ஒழுங்கு பாதிக்கப்படும் சூழல் இருப்பதால், போலீசார் அதிக கவனம் எடுத்துகொண்டு தடை செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். ஒட்டுக்கேட்பு கருவி இங்கிலாந்து அல்லது பெங்களூரிலிருந்து வாங்கப்பட்டிருக்கலாம். ஏன் ஒட்டுக்கேட்பு கருவி வைத்தார்கள், யார் வைத்தார்கள் என எனக்குத் தெரியும். அதை நான் அடுத்த வாரம் கூறுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

### ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில்
# தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகளை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்



**ஒட்டன்சத்திரம், ஜூலை 25-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி மத்திய அரசின் சுவெச் சர்வேக்ஷான் தரவரிசை பட்டியலில் தேசிய அளவில் 387 வது இடத்தையும் மாநில அளவில் 19 வது இடத்தையும் பிடித்துள்ளது இதனையடுத்து ஒட்டன்சத்திரம் நகராட்சி பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வளங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி சீருடைகள் வழங்கினார். நிகழ்வில் கோட்டாட்சியர் கண்ணன் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி ஆணையாளர் சுவேதா நகர மன்ற தலைவர் திருமலைச்சாமி நகர் மன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி நகர்மன்ற உறுப்பினர்கள் கண்ணன், முகமதுமீரான், அம்ச நிவேதா, நகராட்சி பொறியாளர் சுப்பிரமணிய பிரபு, கணக்காளர்சரவணன், சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் பாண்டியராஜன், கிராம நிர்வாக அலுவலர் சிவராஜ், கிராம உதவியாளர் விஜயபாஸ்கரன், பைசல் முகமது, துறை சார்ந்த அலுவலர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் விண்ணப்பித்த பயனாளிகளிடம் மனுக்களை பெற்றுக்கொண்டு உடனடியாக தீர்வு கண்ட மனுக்களுக்கு அமைச்சர் அர. சக்கரபாணி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# திருமலைக்கேணியில் அமாவாசை தின விழா



**நத்தம், ஜூலை 25-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஆடி மாத அமாவாசை தின விழா நடந்தது. இதையொட்டி முருகபெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.ராஜாங்க திருக்கோலத்தில் முருகன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து மாலையில் சுவாமி புறப்பாடு நடந்தது.மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.பின்னர் பக்தர்களுக்கு அறுசுவை உணவு அன்னதானம் வழங்கப்பட்டது.இதையொட்டி சுற்றுவட்டாரங்களிலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் ஏராளமான முருகபக்தர்கள் கலந்துகொண்டு நெய்விளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர்.

### வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய
# அ.தி.மு.க. சார்பில் விளையாட்டு உபகரணங்கள் - அன்னதானம்
### முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் வழங்கினார்



**வாடிப்பட்டி, ஜூலை 25-**

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் செமினிப்பட்டியில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் மு.காளிதாஸ் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சரும் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளருமான ஆர்.பி. உதயகுமார் விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கி அன்னதானமும் வழங்கினார்.

முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம்.வி. கருப்பையா மாணிக்கம் முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர் நிர்வாகிகள் அம்மா பேரவை மாவட்ட துணைசெயலாளர் கல்லனை மனோகரன் .மகளிர் அணி வட்சுமி வழக்கறிஞர் கோவில்பட்ட அழகர்சாமி தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட தலைவர் மதுசூதனன் .பாலன் தென்கரை நாகமணி . விருகை தருமர் அலங்காநல்லூர் ஒன்றிய எம்.ஜி.ஆர். இளைஞர் அணி முன்னாள் செயலாளர் புதுப்பட்டி கிளைச் செயலாளர் பாண்டுரங்கன் . அய்யங்கோட்டை செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர் செமினி பட்டி கிளைச் செயலாளர் நன்றி கூறினார்

# அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**வத்தலக்குண்டு, ஜூலை 25-**

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் மக்கள் கோரிக்கை மனுக்கள் பெறும் சிறப்பு முகாம் நாகைய கவுண்டன் பட்டியில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு அம்மையநாயக்கனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.பி. செல்வராஜ் தலைமை தாங்கி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் பூங்கொடி முருகு வரவேற்றார்.

சி.அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் மக்கள் கோரிக்கை மனுக்கள் பெறும் சிறப்பு முகாம் நாகைய கவுண்டன் பட்டியில் நடைபெற்றது. இந்த முகாமிற்கு அம்மையநாயக்கனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.பி. செல்வராஜ் தலைமை தாங்கி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் பூங்கொடி முருகு வரவேற்றார்.

திண்டுக்கல் மாவட்டத்தின் பேரூராட்சிகளின் இணை இயக்குனர் ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு அழைப்பாளராக தி.மு.க மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், நிலக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் கரிகால பாண்டியன், அம்மையநாயக்கனூர் தி.மு.க பேரூர் செயலாளர் ராஜாங்கம், ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இந்த சிறப்பு முகாமில் பொதுமக்களிடம் இருந்து 600க்கு மனுக்கள் பெறப்பட்டது. மகளிர் உரிமை தொகை, பட்டா, பட்டா மாறுதல், ரேசன் கார்டில் பெயர் திருத்தம், புதிய ரேசன் கார்டு, முதியோர் உதவி தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை சம்மந்தமாக மக்கள் மனுக்கள் கொடுத்தனர்.

அம்மையநாயக்கனூர் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் விமல்குமார் சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார், கவுன்சிலர்கள் அரசு அனைத்து துறை அலுவர்கள், பணியாளர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர். அம்மையநாயக்கனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெய பாண்டி தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.றப்பு அழைப்பாளராக தி.மு.க மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், நிலக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் கரிகால பாண்டியன், அம்மையநாயக்கனூர் தி.மு.க பேரூர் செயலாளர் ராஜாங்கம், ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.இந்த சிறப்பு முகாமில் பொதுமக்களிடம் இருந்து 300க்குமேற்பட்டமனுக்கள் பெறப்பட்டது. மகளிர் உரிமை தொகை, பட்டா, பட்டா மாறுதல், ரேசன் கார்டில் பெயர் திருத்தம், புதிய ரேசன் கார்டு, முதியோர் உதவி தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை சம்மந்தமாக மக்களிடம்600 மனுக்கள் பெறப்பட்டது.

அம்மையநாயக்கனூர் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் விமல்குமார் சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார், கவுன்சிலர்கள் அரசு அனைத்து துறை அலுவர்கள், பணியாளர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர். அம்மையநாயக்கனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெய பாண்டி தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி செயல் அலுவலர் பூங்கொடி முறுகு தலைமையில் செய்திருந்தார்கள். முகாமில்கலந்துகொண்டஅனைவருக்கும் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

### மத்திய அரசின் வேளாண் நிதி பெற
# சிறு, குறு நிறுவனங்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்க கலெக்டர் அறிவுறுத்தல்

**விருதுநகர், ஜூலை 25-**

மத்திய அரசு அறுவடைக்கு பிந்திய வேளாண் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட நீண்ட கால கடன் வசதி திட்டமாக வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 13 ஆண்டுகளில் வங்கிகள் மூலம் பிணையமற்ற குறைந்த வட்டியிலான கடன் வழங்கப்படுகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டத்திற்கு 2025-2026 நிதியாண்டுக்கு ரூ.26 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பயனாளிக்கு அதிக பட்சமாக ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு கடன் உத்தரவாதம் அளிக்கிறது. 7 ஆண்டு காலத்துக்கு ஆண்டுக்கு 3% வட்டிக்குறைப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பயன்பெறலாம். அரசு அறிவித்துள்ள இந்த வேளாண் உட்கட்டமைப்புகளுக்கான கடன் வசதியின் மூலம் வேளாண் விளைபொருட்கள் வீணாகாமல், சேமித்து வைத்து நல்ல விலை கிடைக்கும் வகையில் கிராமப்புறங்களில் பல்வேறு உட்கட்டமைப்புகளை உருவாக்க இயலும்.

இந்த கடன் வசதியை பெற விரும்பும் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள், தனியார் தொழில் முனைவோர்கள் தங்கள் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மேலாளர்கள், நபார்டு வங்கி மேலாளர்கள் அல்லது வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். மேலும், இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் https://agriinfra.dac.gov.in என்ற இணைய முகவரியில் விரிவான திட்ட அறிக்கையுடன் தாங்கள் விரும்பும் வங்கிக்கிளைக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

# சிவகாசியில் வளர்ச்சி திட்டப்பணிகள்: மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா ஆய்வு



**விருதுநகர், ஜூலை 25-**

சிவகாசி வட்டத்தில், பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெள்ளூர் கிராமத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் மாவட்ட கலெக்டர் நேரில் சென்று பார்வையிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து, நிறைவேற்ற உத்தரவிட்டார். வெள்ளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் ஆய்வு செய்தார். பின்னர், பூவநாதபுரம் விலக்கு முதல் வடமலாபுரம் வரை சுமார் 10 கி.மீ. தூரத்தில் ரூ.120 கோடி மதிப்பில் சுற்றுச்சாலை பணிகள் மற்றும் பாலங்கள் கட்டப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடிப்பதற்கும் சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, அரசின் மூலம் ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைகிறதா என பொதுமக்கள் மற்றும் பயனாளிகளிடம் கலந்துரையாடி, கருத்துக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ராமேசுவரம் அக்னி தீர்த்தம் கடற்கரையில் ஆடி அமாவாசை முன்னிட்டு தர்ப்பணம் பூஜை கொடுத்து புனித நீராடும் பக்தர்கள்

### ஆடி அமாவாசையை முன்னிட்டு
# ராமேசுவரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி சுவாமி தரிசனம்

**ராமேசுவரம், ஜூலை 25-**

ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடலில் ஆடி அமாவாசை முன்னிட்டு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடி பின்னர் ராமநாதசாமி திருக்கோவிலில் நேற்று வியாழக்கிழமை சாமி தரிசனம் செய்தனர். ராமேஸ்வரத்தில் ஆண்டுதோறும் ஆடி அமாவாசை,தை அமாவாசை, மஹால்யா அமாவாசை ஆகிய நாட்களில் ஏறத்தாழ 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை பக்தர்கள் வருகை தந்து காசிக்கு நிகராக கருதப்படும் அக்னிதீர்த்தக் கடலில் புனித நீராடி பின்னர் ராமநாதசாமி திருக்கோவில் சுவாமி தரிசனம் செய்வது அதிகமான பக்தர்கள் உள்ளனர். இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை ஆடி அமாவாசை நாளாகும். இந்த நாளை முன்னிட்டு ராமேஸ்வரத்திற்கு அதிகாலையில் சிறப்பு ரயில்கள் மற்றும் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் மூலம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் குவிந்தனர். இவர்கள் அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் பூஜைகள் கொடுத்து வழிபட்டனர். அதன் பின்னர் ராமநாதசாமி திருக்கோவிலில் அமைந்துள்ள 22 புனித தீர்த்தத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து தீர்த்தமாடினார்கள். தொடர்ந்து ராமநாதசாமி பருவதவர்த்தினி அம்மன் சன்னதியில் அதிகாலை 4 மணியிலிருந்து நடைபெற்ற ஸ்படிலிங்க பூஜையில் இருந்து கலந்து கொண்டு அதன் பின்னர் அதிகாலை பூஜை முதல் பகல் முழுவதும் நடைபெற்ற பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தமிழக இந்து அறநிலைத்துறை அதிகாரிகளின் உத்தரவுன் பேரில் திருக்கோவில் நேற்று கட்டணமில்லா தரிசன பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் பக்தர்கள் எந்த சிரமமின்றி வரிசையில் நின்று சன்னதியில் சாமி தரிசனம் செய்தனர் அதுபோல ராமேஸ்வரம் நகர் முழுவதும் பக்தர்கள் கூட்டம் காணப்பட்டாலும் அவர்கள் வந்த வாகனங்களை உரிய இடங்களில் பார்க்கிங் வசதிகளை ஏற்படுத்தி வாகன வழிமுறைகளை செய்து காவல்துறையினர் எந்த போக்குவரத்து இடையூறு இல்லாமல் செய்திருந்தனர் அதுபோல கோவில் நிர்வாகம் பக்தர்களின் வசதிக்காக குடிநீர் வசதி மருத்துவ வசதி ஆகியவற்றை செய்து இருந்தது. அதுபோல ஆடி அமாவாசை முன்னிட்டு ராமேஸ்வரம் நகர் முழுவதும் தனியார் அறக்கட்டளைகள் மடங்கள் பொதுநல அமைப்புகள் ஆன்மீகவாதிகள் அன்னதானங்கள் ஏகமானதாக வழங்கி வந்தனர் இதனால் ராமேஸ்வரத்திற்கு நேற்று வருகை இருந்த பக்தர்கள் உணவு இன்றி தவிர்க்காமல் அனைவரும் பசியாறி திரும்பிச் சென்றனர்.

### திருமங்கலம் ரயில் நிலைத்தில்
# கூடுதல் முன்பதிவு டிக்கெட் கவுண்டர் அமைக்குமாறு பயணிகள் கோரிக்கை





**திருமங்கலம், ஜூலை 25-**

மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் ரயில் நிலைத்தில் கூடுதல் முன்பதிவு டிக்கெட் கவுண்டர் அமைத்திட வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருமங்கலம் ரயில் நிலையத்தில் இருந்து திருச்சி, சென்னை, பெங்களூர், நாகர்கோவில், திருவனந்தபுரம், கொல்லம், எர்ணாகுளம் மற்றும் குருவாயூர் பகுதிகளுக்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்கள் இங்கு நின்று செல்வதால் நாள் தோறும் நூற்றுக் கணக்கான பயணிகள் இங்கிருந்து பயணம் மேற்கொள்கின்றனர். இந்த நிலையில் திருமங்கலம் ரயில் நிலையத்தில் முன்பதிவற்ற பொது டிக்கெட் கவுண்டரும், முன்பதிவு டிக்கெட் எடுத்திடும் கவுண்டரும் செயல்பட்டு வருகிறது. முன்பதிவற்ற டிக்கெட் கவுண்டரில் மின்னல் வேகத்தில் டிக்கெட் விநியோகம் நடைபெற்று வரும் நிலையில் முன்பதிவு டிக்கெட் கவுண்டரில் தட்கல் முன்பதிவு நேரத்தில் ஏற்படும் கூட்ட நெரிசல் மற்றும் காலதாமதம் காரணமாக பயணிகள் தங்களது அவசர கால பயணங்களை தவறவிடும் நிலை உருவாகி உள்ளது. முன்பதிவு மற்றும் தட்கல் முன்பதிவு நேரத்தில் ஏற்படும் கால தாமதத்தை கருத்தில் கொண்டு தினம் தோறும் நூற்றுக்கணக்கான பயணிகள் வந்து செல்லும் திருமங்கலம் ரயில் நிலையத்தில் கூடுதலாக ஒரு முன்பதிவு டிக்கெட் கவுண்டர் அமைப்பதன் மூலம் பயணிகள் எளிதில் தட்கல் மற்றும் முன்பதிவு டிக்கெட் எடுத்திட முடியும். எனவே திருமங்கலம் பகுதி பொதுமக்கள் மற்றும் பயணிகளின் நலன் கருதி கூடுதல் முன்பதிவு டிக்கெட் கவுண்டரை திறந்திட ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

# நத்தம் அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**நத்தம், ஜூலை 25-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஆவிச்சிபட்டி ஊராட்சி நடுவனூரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. முகாமை முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம் தலைமை தாங்கி மனுக்களை வாங்கி தொடங்கி வைத்தார்.திமுக மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய செயலாளர்கள் சேக்சிக்கந்தர்பாட்சா, ரத்தினக்குமார், பழனிச்சாமி,நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளின் சார்பில் 609 மனுக்கள் பெறப்பட்டது. இதில் 30 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது.

முகாமில் திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன், மகுடபதி, மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திரசோழன் பிறந்த நாள் ஆடி திருவாதிரை விழாவினை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், இரா.இராஜேந்திரன், சிவசங்கர் ஆகியோர் துவக்கி வைத்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். உடன் மாவட்ட கலெக்டர் இரத்தினசாமி, எம்.எல்.ஏ.க்கள் கண்ணன், சின்னப்பா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே பழனிசாமி, தொடர் சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக நேற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார். அருகில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் உள்ளார்.

### மும்பை குண்டுவெடிப்பு வழக்கு:

## ஐகோர்ட் தீர்ப்புக்கு சுப்ரீம் கோர்ட் தடை

**புதுடெல்லி, ஜூலை 25-**

மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் 12 பேரை, உயர் நீதிமன்றம் விடுவித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் நிறுத்திவைத்து உத்தரவிட்டுள்ளது. மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளிகள் 12 பேரை ஐகோர்ட் விடுவித்த உத்தரவை சுப்ரீம் கோர்ட் நிறுத்தி வைத்துள்ளது.

கடந்த 2006ம் ஆண்டு, ஜூலை 11ம் தேதி, மும்பை புறநகர் ரயில்களில் சங்கிலி தொடர் போல அடுத்தடுத்து 7 வெடிகுண்டுகள் வெடித்த சம்பவம் ஒட்டு மொத்த தேசத்தையும் உலுக்கியது. இந்த கொடூர சம்பவத்தில் 180க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். 800க்கும் மேற்பட்டோர் அப்பாவிகள் படுகாயமடைந்தனர்.

குண்டுவெடிப்பு சம்பவத்தை விசாரித்த மும்பை சிறப்பு நீதிமன்றம், வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்ட 12 பேரில், 5 பேருக்கு மரண தண்டனையும், எஞ்சியவர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதித்து 2015ல் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து மும்பை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

வழக்கில் இருதரப்பு வாதங்கள் நிறைவடைந்த நிலையில், அரசு தரப்பு குற்றத்தை நிரூபிக்க தவறிவிட்டதாக கூறி, 12 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த தீர்ப்பை எதிர்த்து, மஹாராஷ்டிரா அரசு மற்றும் இவ்வழக்கை விசாரித்த பயங்கரவாத தடுப்பு பிரிவு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

இந்த மனு நேற்று (ஜூலை 24) நீதிபதிகள் எம். எம்.சுந்தரேஷ் மற்றும் என். கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளிகள் 12 பேரை ஐகோர்ட் விடுவித்த உத்தரவை சுப்ரீம் கோர்ட் நிறுத்தி வைத்து உத்தரவிட்டனர். வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி, மாநில அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவுக்கு பதில் அளிக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், ஐகோர்ட் தீர்ப்பை ஒரு முன்னுதாரணமாகக் கருத முடியாது என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

## அரசுத் தொடக்கப்பள்ளிகளில் 3.94 லட்சம் மாணவர் சேர்க்கை:அமைச்சர் பெருமிதம்

**சென்னை, ஜூலை 25-**

தமிழ்நாடு அரசுத் தொடக்கப்பள்ளிகளில் இந்தாண்டு மாணவர் சேர்க்கை 3.94 லட்சமாக அதிகரித்துள்ளது என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், " தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களின் பலனாக நேற்று வரையிலும் அரசுத் தொடக்கப்பள்ளிகளில் 3,94,016 மாணவர்கள் புதிதாக சேர்ந்துள்ளார்கள் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரும் வருக! கல்வியின் வழியே அறிவுலகை ஆள்க!" என்று தெரிவித்துள்ளார்.

## பணி நியமன ஆணைகளை...(1-ம் பக்க தொடர்ச்சி)

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பாதவது., இந்த இனிய விழாவில் பங்கேற்று, இடைநிலை ஆசிரியர்களுக்கு நானே நேரில் பணிநியமன ஆணைகள் வழங்கவேண்டும் என ஆவலாக இருந்தேன். ஆனால், சிறிது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவர்கள் ஓய்வெடுக்குமாறு கூறிய அறிவுரையின் காரணமாக, இந்த விழாவில் பங்கேற்க இயலாமல் போனது வருத்தமளிக்கிறது. நிகழ்ச்சிக்கு நேரில் வர இயலாமல் போனாலும் எனது எண்ணமெல்லாம் உங்களைக் குறித்தே உள்ளது.

பிற்போக்குத்தனமான, அறிவியல் அணுகுமுறைகளுக்கு எதிரான புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறைக்கான நிதியை ஒன்றிய பாஜக அரசு வழங்க மறுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய நெருக்கடிக்கு இடையிலும், பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான பல புதுமையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஆசிரியப் பெருமக்களின் தேவைகளை உணர்ந்த அரசு இந்த அரசு. மாணவர் நலனையும், ஆசிரியர் நலனையும் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை இரண்டு கண்களெனப் போற்றிச் செயலாற்றி வருகிறது. பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் இன்னும் வளரும், தொடரும் என்று கூறி, புதிதாக பணியேற்கும் இடைநிலை ஆசிரியப் பெருமக்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம், மாநகராட்சி மண்டலம்-1, புதிய அலுவலக கட்டிடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையாளர்சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன்

## வீடு இல்லாத மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படும்: இ.பி.எஸ். அறிவிப்பு

**பட்டுக்கோட்டை, ஜூலை 25-**

அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் வீடு இல்லாத மீனவர்களுக்கு வீடுகள் கட்டி தரப்படும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பட்டுக்கோட்டையில் உள்ள தனியார் அரங்கத்தில் மாற்றுக்கட்சியினர் 500-க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் கட்சியில் இணைத்தனர்.

இதைத்தொடர்ந்து அவர் விவசாய சங்க அமைப்பினர், தென்னை விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் மீனவ பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். அப்போது அவர்களது கோரிக்கைகளை குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:- பட்டுக்கோட்டை பகுதியில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் 2 முறை பயிர் கடன் தள்ளுபடி செய்துள்ளோம். குறுவை, சம்பா சாகுபடி தொகுப்பு கொடுத்தோம். உழவன் செயலியை அறிமுகப்படுத்தினோம். அதில் விவசாயிகளுக்கு தேவையான தகவல்களை வழங்கினோம். கஜா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கினோம். அதுபோல் மீன்பிடித் தடைக்கால நிவாரணமும் அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தி வழங்கப்படும்.

தென்னை விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அ.தி.மு.க. ஆட்சி அமைத்தவுடன் செய்து தரப்படும். கஜா புயலின் போது சேதமான படகுகளுக்கும் உரிய இழப்பீடு வழங்கினோம். எனவே அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் உங்கள் அனைவரது கோரிக்கைகளும் நிறைவேற்றி தரப்படும். மேலும் அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் வீடு இல்லாத மீனவர்களுக்கு வீடுகள் கட்டி தரப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னை அண்ணா சாலையில் மேம்பால கட்டுமான பணி

### அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு

**சென்னை, ஜூலை 25-**

சென்னை அண்ணா சாலையில் கட்டப்பட்டு வரும் நான்கு வழித்தட உயர் மட்ட மேம்பாலப் பணிகளை அமைச்சர் ஏ.வ. வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் 3.5 கி.மீ நீளமுள்ள நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலப் பணிகள் ரூ. 621 கோடி மதிப்பீட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் 19.01.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இப்பணியின் முன்னேற்றத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ஏ.வ. வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தற்போது 30% பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், மெட்ரோ சுரங்கப்பாதை மற்றும் பிற இடங்களில் நடைபெறும் அடித்தள, மைக்ரோ பைல், ஜியோ சிந்தடிக் லேயர் மற்றும் வெல்டிங் பணிகளை விரைவாக முடிக்கவும், மழைக்காலத்திற்கு முன் அடித்தள பணிகள் நிறைவு பெறும் வகையில் வேகப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பணிகள் நடைபெறும் இடங்களில் போக்குவரத்து காவல்துறை, மின் வாரியம், மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம், வனத்துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து, பொதுமக்கள் இடையூறு இல்லாமல் பணிகள் நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

## 6 மாவட்டங்களில் இன்று கனமழை

**புதுடெல்லி, ஜூலை 25-**

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

இன்று நீலகிரி, தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் கோவை, திருநெல்வேலி மாவட்டங்களின் மலை பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய வங்க தேசம், மேற்கு வங்கம் கடற்கரை பகுதியில் உருவாகியிருக்கும் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைய வாய்ப்புள்ளது. இதனால், தமிழகத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.






மதுரை தெப்பக்குளம் பகுதியில் உள்ள முக்தீஸ்வரர் கோவிலில் ஆடிமாவாசையொட்டி மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் சார்பில் அதன் நிறுவனர் நெல்லை பாலு ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அன்னதானம் வழங்கினார்.



மதுரை மாநகர் மத்திய 4 - ம் பகுதி 75-வது வட்ட அ.தி.மு.க.சார்பில் வட்ட செயலாளர் ஐடியல் புகழேந்தி தலைமையிலும், பகுதி செயலாளர் எம்.ரவிராஜ் முன்னிலையிலும் வசந்தநகரில் நடைபெற்ற தெருமுனைபிரச்சாரக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், சக்திமோகன், ஏ.இந்திரா, சக்திவிநாயகர் பாண்டியன், ஏ.பார்த்திபன், பேராசிரியர் ஜெயபால், எம்.ஜி.ராமச்சந்திரன், வி.பி.ஆர்.செல்வகுமார், ஜெயபாண்டி, மார்க்கெட் செந்தில்குமார், மார்க்கெட் மார்நாடு, கார்னர் பாஸ்கர், மல்ர்விழி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.